பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 09 வெள்ளிக்கிழமை 26.10.2018 கதிர் 354

**இனி இது ரகசியம் அல்ல!**

இனி, மாகாண சபைத் தேர்தல் எப்போது நடக்கும் என்பது தெரியவில்லை. எப்போதும் நடக்கலாம். எப்போது நடந்தாலும் வடக்கில் எத்தனை அணிகள் களமிறங்கும் என்பதுதான் கேள்வி.

கூட்டமைப்பு ஓரணி. அதில் எத்தனை கட்சிகள் மிஞ்சும் என்பது போகப் பக்கம் 02

# விக்கியின் கூட்டணியில் இணையவேமாட்டோம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 26

**கொள்கையில் திடமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்காத தரப்புக்களுடன் முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கூட்டணி வைத்துள்ள நிலையில், வெறுமனே ஒற்றுமைக்காக மட்டும் அவருடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக இல்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

**அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.** பக்கம் 11

## விக்கியின் கூட்டணியை வரவேற்கின்றார் டக்ளஸ்!

கொழும்பு, ஒக். 26

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ள அரசியல் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியைத் தாம் வரவேற்கின்றார் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புதிய, புதிய அரசியல் கட்சிகள் பக்கம் 11

## விக்கியின் குடை சிறியதே அங்கு எனக்கு இடமில்லை

### மனோ கணேசன் நகைச்சுவைப் பதில்



வவுனியா, ஒக். 26

விக்னேஸ்வரனின் குடை சிறியது. எனக்குப் பெரிய குடையே தேவை. எனக்கு அங்கு இடமில்லை. நேற்றுத்தானே ஆரம்பித்துள்ளார். பெரிய குடையாக வரும்போது யோசிக்கலாம் என அமைச்சர் பக்கம் 11

## விக்கி ஒரு நச்சுச் செடி!

### சிவமோகன் எம்.பி. காட்டம்



வவுனியா, ஒக். 26

புலிகளின் போராட்டத்தை ஒரு நோயாக தனது வாயால் சித்திரித்த விக்கியின் பின்னால் அணிதிரள்வார்களா மறத் தமிழர்கள்? இந்தப் போலிவேசம் தேவையா? வரலாற்றுத் தவறின் அடையாளமான இவர் ஒரு நச்சுச்செடி. என்னைப் பொறுத்தவரை அது வளர்ந்து பக்கம் 11

## விக்கியுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். சேர்ந்து செயற்பட விருப்பம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 26

வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் கட்சியொன்றை ஆரம்பித்துள்ளமையை வரவேற்றுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய வகையில் பக்கம் 11

## வடக்கு அரசு கலைந்தமை; மகிழ்ச்சியில் டக்ளஸ் எம்.பி.

கொழும்பு, ஒக். 26

எமது மக்களின் தலைவிதியுடன் கடந்த ஐந்து வருடகாலமாக விளையாடிக்கொண்டிருந்த ஒரு மாபெரும் தடையானது, 'எமது மக்களின் பக்கம் 11

## மீள ஆட்சிக்கு வரவே விக்கி தனித்துக் கட்சி

### சாடுகின்றது மஹிந்த அணி

கொழும்பு, ஒக். 26

மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றவே, வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் கூட்டமைப்பிலிருந்து விலகித் தனிக் கட்சியை ஆரம்பித்துள்ளார் என மஹிந்த அணி சாடியுள்ளது.

வடக்கு மக்களிடையே கூட்டமைப்பு நன்மதிப்பை இழந்துள்ளதால், தனித்துப் போட்டியிட்டு மக்களின் வாக்கு பக்கம் 02

## மனோ கணேசன் வருகைக்காக மாணவர்கள் மூலம் வீதி துப்புரவு

### பொதுமக்கள் கடும் விசனம்



கிளிநொச்சி, ஒக். 26

அமைச்சர் மனோ கணேசனின் வருகைக்காகக் கிளிநொச்சி – பூநகரிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவர்களைக் கொண்டு வீதியைத் துப்புரவு செய்தமை தொடர்பில் பொதுமக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். பக்கம் 11

## மைத்திரி கொலைச் சதி: நாலக டி சில்வா கைது!



கொழும்பு, ஒக். 26

பயங்கரவாத விசாரணைப்பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டார். பக்கம் 02

## மாகாணத் தேர்தல் நடைபெறாமை; பிரிட்டன் தூதுவர் கடும் அதிருப்தி



கொழும்பு, ஒக். 26

இலங்கையில், ஆறு மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்து, அந்த மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில், பக்கம் 02

## விக்கியுடன் பேசமாட்டாது அரசு சம்பந்தனுடன் மட்டும் பேசுமாம்!

கொழும்பு, ஒக். 26

வடக்கு மாகாணம் தொடர்பான விடயங்களில் எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தனுடனே அரசு பேச்சுக்களை முன்னெடுக்கும் என்றும், இதற்காக விக்னேஸ்வரனைஅழைக்க வேண்டிய தேவை கிடையாது எனவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் பக்கம் 11

## புலமைப்பரிசில் பரீட்சை இனிக் கட்டாயமில்லை!

### கல்வி அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஒக். 26

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை கட்டாயமானது என்ற சுற்றறிக்கையை நீக்கம் பக்கம் 02

# யாழ். பொது நூலகம் எரிப்பு; குற்றச்சாட்டை விசாரியுங்கள்

## கோருகிறார் துமிந்த திஸநாயக்க

யாழ். நூலக எரிப்பு தொடர்பில் முன்னாள் அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் துமிந்த திஸநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் கருத்து தெரிவித்திருந்த குமார் வெல்கம, நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகேயே யாழ் நூலக எரிப்புக்குக் காரணம் எனக் குற்றம்சாட்டியிருந்தார்.

இது தொடர்பாகப் பல குற்றச்சாட்டுகளை குமார் வெல்கம முன்வைத்திருந்தார்.

குமார் வெல்கம முன்வைத்திருந்த பாரதூரமான குற்றச்சாட்டுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என துமிந்த திஸநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஒருவர், இன்னொரு நபரின் கரங்கள் குருதியில் நனைந்துள்ளன, அவர் சில குற்றங்களுக்குக் காரணம் என குற்றம்சாட்டினால் இந்த முக்கியமான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவையா என்பதை கண்டுபிடிப்பதற்கு உரிய அமைப்புகள் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். முன்னாள் அமைச்சர் முன் வைத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையென்றால் அதற்கு காரணமானவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கவேண்டும்.

குமார வெல்கம தெரிவிக்கும் ஒவ்வொரு விடயமும் முக்கிய மானது. அவர் தனது மனதில் பட்டதை வெளிப்படையாகச் சொல்லக் கூடியவர்–என்றார். (ஐ)

## முதியோர் தினவிழா

யாழ். புதிய சோனக தெரு (ஜே/88) முதியோர் சங்கத்தின் முதியோர் தினவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கத்தில் சங்கத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தன் கலந்துகொள்வர்.

கலை நிகழ்வுகளை அடுத்து போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பரிசில் வழங்கல், உறுப்பினர்களுக்கான பரிசில் வழங்கல் இடம்பெறும்.

## மீள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பெற்று மீண்டும் கூட்டமைப்புடன் இணையும் திட்டம் விக்கியிடம் இருப்பதாக, மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர், திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த நான்கு வருடகாலமாக இந்த அரசுக்கு ஆதரவளித்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமக்கு எதனையும் செய்யவில்லை என்ற கவலை தமிழ் மக்களுக்கு இருக்கிறது.

மஹிந்தவின் கடந்த ஆட்சிக்காலத்தில் வடக்கில் அபிவிருத்திகள் இடம்பெற்றன. அவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. அவர்கள் வாழ்க்கையைக் கொண்டுச் செல்வதற்கு வருமானம் கிடைத்தது.

இவை அனைத்தும் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கத் தமிழத் தேசியக் கூட்டமைப்பு தவறியுள்ளது.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த மக்கள் மத்தியில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. நன்மதிப்பையும் இழந்துள்ளது. இதனால் மக்களின் குழப்பத்தைப் பயன்படுத்திச் சுயாதீனமாகக் களமிறங்கி மக்களின் வாக்குகளைப் பெற்று, மீண்டும் கூட்டமைப்புடன் கைகோர்த்து, வடக்கின் அதிகாரத்தைப் பெறும் சுழற்சியாகவே நான் அதனைப் பார்க்கிறேன்.

இதுவரைக்காலமும் இந்த மாதிரியான அரசியல் செயற்பாடுகள் தெற்கில் மாத்திரமே நடைபெற்றன. இப்பொழுது மக்களை ஏமாற்றும் செயற்பாடுகள் வடக்கிலும் ஆரம்பமாகியுள்ளது – என்றார். (ஐ)

# புதிய பயங்கரவாதச் சட்டமூலம் ; எதிராக எட்டு மனுக்கள் தாக்கல்

கொழும்பு, ஒக். 26

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாத தடைச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் எட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றின் பிரதிகள் தனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சபாநாயகர் கரு ஜயசூரிய சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்ற சபை அமர்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது. இதன்போது, சபாநாயகரின் அறிவிப்புகள் முன்வைக்கப்பட்டபோதே சபாநாயகர் கரு ஜயசூரிய இந்த அறிவிப்பை விடுத்தார்.

அத்துடன் இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டமூலத்திலும் தான் கையொப்பம் இட்டுள்ளதாக அவர் சபையில் கூறினார்.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கடந்த 09 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போகத்தான் தெரியும்.

அடுத்து – இரண்டாவது – முன்னாள் முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் கடசியான தமிழ் மக்கள் கூட்டணி தலைமையிலான அணி. அதில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., அனந்தி அணி எல்லாம் சங்கமித்துவிடும் என்பது நிச்சயம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முதலமைச்சரின் கட்சியுடன் சேர்ந்து பயணிக்குமா என்பது கேள்விக் குறியே. இப்போதைய நிலையில் கடும் தமிழ்த் தேசியம் பேசும் தரப்புகள் எல்லாம் கஜேந்திரகுமாருக்குப் பின்னால் தனித்து நிற்கக் கூடும். இறுதி நேரத்தில் விட்டுக் கொடுப்புகள், இறங்கி வருதல் போன்றவை இடம்பெறா விட்டால், வெற்றியைப் பற்றிச் சிந்திக்காமல் கொள்கை பற்றிய விடயத்தில் மட் டும் மிக மூர்க்கமாக நிற்கும் கஜேந்திரகுமார் தரப்பு மூன்றாவது அணியாகத் தனித்து களமிறங்கவும் வாய்ப்புண்டு.

அதேசமயம், ஈ.பி.டி.பியையும் உள்ளடக்கி நாலாவது அணி ஒன்றை உருவாக்கும் முயற்சி சத்தம் சந்தடியின்றி நடந்து வருவதாக நம்பகமாகத் தெரிய வருகின்றது. சில பிரமுகர்கள், சட்டத்தரணிகள் இது தொடர்பான இடைத் தொடர்பாளர்களாகப் பேச்சுக்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னாள் வடக்கு, கிழக்கு முதலமைச்சர் வரதராஜப் பொருமாளின் தமிழர் சமூக ஜனநாயக் கட்சி, கிளிநொச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் தரப்பு ஆகியன எல்லாம் இந்த நாலாம் அணிக்குள் வருவதற்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டன என்று தகவல்.

ஆனந்த சங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் இதற்குள் சேர்ப்பதா என்பது இன்னும் முடிவாகவில்லை.

இதேசமயம், லங்கா சமசமாஜக் கட்சி, நவம்சமசமாஜக் கட்சி போன்ற இடதுசாரித் தரப்புகளும் இந்த நான்காவது அணில் சேர விருப்பம் தெரிவித்திருக்கின்றன. அது தொடர்பான பேச்சுகள் இந்த வார இறுதியில் நடக்கும் என்று ஒரு சம்பந்தப்பட்ட தரப்புகளில் பேசப்பட்டது.

மன்னார் சிவகரனின் ஜனநாய கத் தமிழரசுக் கட்சியும் கூட நீதியரசர் விக்னேஸ்வரனின் அணி யுடன் சேரக்கூடும்.

முன்னாள் ரெலோவின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஷ் வேலாயுதத்தின் கட்சி தனிவழிப் போகும் எனக் கூறப்பட்டது.

முன்னாள் விடுதலைப் புலிகளும் ஜனநாயகப் போராளிகள் கட்சி என்றும், பிற பெயர்களிலும் பிரிந்து இயங்குகின்றனர். ஜனநாயகப் போராளிகள் அணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனேயே நிற்கும் எனத் தெரிகின்றது.

எது, எப்படி என்றாலும் தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர்தான் இந்த அணி சேரலும், அணி பிரிதலும் மும்முரமாகும் என்று எதிர்பார்க்கலாம்.

அதுவரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் கீழ் இப்போது 'பம்பிக்' கொண்டிருக்கும் புளொட், ரெலோ போன்றவை கூட மதில் மேல் பூனையாக– இரண்டு பக்கமும் பாதையத் திறந்து வைத்து விட்டு – காத்திருக்கும் என நம்பலாம். - மின்னல்-

# புலிகளுக்கு நட்டஈடு புலம்புகின்றார் விமல்

கொழும்பு, ஒக். 26

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு நட்டஈடு வழங்க முன்வராத அரசு சர்வதேச நிபந்தனைக்கு அமைய புலிகளுக்கு நட்டஈடு வழங்குகின்றது என கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதிச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முட்டாள்தனமான பொருளாதாரக் கொள்கைகளின் மூலமாகவே இன்று நாட்டின் ரூபா வீழ்ச்சி கண்டுள்ளது. இதனால் எமது நாட்டின் சாதாரண தொழில்களில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பை கண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## 6ஆம் ஆண்டு நிறைவு விழாவும் வீட்டுத் திட்டம் கையளிக்கும் நிகழ்வும்

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் 6 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் வீட்டுத் திட்டம் கையளிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவிலில் அந்தைள்ள ஆசிமட அரசடி விநாயகர் நலன்பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிலகள் அமைச்சர் மனோ கணேசன் கலந்துகொள்வார்.

## சண்டிலிப்பாய் இந்து நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பும்

சண்டிலிப்பாய், ஒக.26

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, பாடசாலை மண்டபத்தில் அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக 'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' செயற்திட்ட இயக்குநர் கே.பத்மானந்தனும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரும் பழைய மாணவியுமான திருமதி தாருணி கிருசாந்தனும், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கலாதீபனும் கலந்துகொள்வர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆற்றுவார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

## புதிய நூல்களின் காட்சிப்படுத்தல்

பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய மாதத்தை முன்னிட்டு புதிய நூல்களின் காட்சிப்படுத்தல் யாழ். பொதுசன நூலக மேற்தளத்தில் உள்ள இளையோர் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி புதிய நூல்களின் காட்சிப்படுத்தலை மாநகர சபை முதல்வர் இ.ஆர்னோல்ட் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அண்மையில் 50 ஆயிரம் புதிய நூல்கள் இந்திய அரசால் யாழ். பொதுசன நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. அதிலிருந்து ஒரு தொகுதி நூல்கள் காட்சிப்படுத்தப்படவுளளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது குடும்பத்தினரைப் படுகொலை செய்யச் சதித் திட்டம் தீட்டப்பட்டமை தொடர்பாக, பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா மற்றும் நாமல் குமார ஆகியோரிடம் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவிடம் நேற்று 5ஆவது தடவையாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வாக்குமூலம் பெறப்பட்டது. அதனையடுத்து அவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, படுகொலைச் சதித் திட்டம் தொடர்பாக நாமல் குமார வெளியிட்ட ஒலிப்பதிவில், இருக்கும் குரல், பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவினுடையதுதான் என்று அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் குரல் சோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உத்தரவிட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளருக்கு இந்த உத்தரவை அவர் வழங்கியுள்ளார்.

தேசியப் பாடசாலைகளில் தரம் –6இற்கு மாணவர்களை இணைத்தல் மற்றும் உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புலமைப் பரிசில் கட்டாயமானது என்ற சுற்றறிக்கையை வெற்றும் வெறிதானது மானதாக்கக் கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் நடத்தப்படாமல் உள்ளமையானது, பலரையும் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளது என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டவுரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், தனது டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை இட்டுள்ள தூதுவர், உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படும்போதே, அந்த நாடுகளின் ஜனநாயகம் பாதுகாக்கப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் பதவிக்காலம் நேற்று முன் தினம் நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ)

# அரசுக்கு வழங்கும் ஆதரவை பரிசீலனை செய்ய நேரிடும்

## அமைச்சர் திகாம்பரம் எச்சரிக்கை



தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளத்தைபெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை யெடுக்கவேண்டுமெனவும் இல்லையென்றால் அரசுக்கு வழங்கும் ஆதரவு தொடர்பாக மீளாய்வு செய்ய நேரிடுமென அமைச்சர் திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர்சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நான் அமைச்சராக இருக்கின்றேன். என்பதனைக் காட்டி ஏன் என்னால் சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொடுக்க முடியாதா எனக் கேட்கின்றனர். எமக்குக் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட முடியாது. அதற்கெனச் சங்கங்கள் இருக்கின்றன. எம்மால் அழுத்தத்தையே கொடுக்க முடியும். அதனைச் செய்கின்றோம்.

இதன்படி அரசு தலையிட வேண்டும். என்ற கோரிக்கையை நாங்கள் விடுக்கின்றோம். இந்தச் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் எமது ஆதரவை மீளாய்வு செய்யவேண்டி வரும். இதனை மனதிலிருந்தே பேசுகின்றேன். நாக்கிலிருந்து பேசவில்லை–என்றார்.(ஐ)

# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அடுத்த வருடம் முதல் இயங்கும்

கொழும்பு, ஒக். 26

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அடுத்த வருடம் முதல் மீண்டும் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக முன்வைக்கப்பட்ட பத்திரங்களுக்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளதாக வணிக அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தடன், முல்லைத்தீவில் ஓட்டுத்தொழிற்சாலையும், மட்டக்களப்பு, வாழைச்சேனையில் கடதாசித் தொழிற்சாலையும் அடுத்த வருடம் முதல் மீண்டும் இயங்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் 300 ஏக்கரில் தொழில்பேட்டை ஒன்று அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ராணுவ விவசாயப் பண்ணைகளை மக்களிடம் ஒப்படைக்கத் தீர்மானம்

வடக்கு–கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் நடத்தி வந்த விவசாயப் பண்ணைகளை மக்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னெடுப்பதற்கு எதிர்வரும் வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரால்விவசாயப்பண்ணைகள்நடத்தப்பட்டு வருகின்றன. மக்களிடம் அவற்றைக் கையளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பல தடவைகள் வலியுறுத்தப்பட்டன. வடக்கு–கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி சிறப்புச் செயலணிக் கூட்டத்திலும் இந்தக்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. தாம் நடத்தும் பண்ணைகளை மக்களிடம் கையளிப்பது தொடர்பில் ஆராய்வதற்குக் குழு நியமிக்கப்பட்டிருந்ததாக, இராணுவப் பேச்சாளர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே அவற்றை மக்களிடம் கையளிக்க இராணுவம் முடிவு செய்துள்ளது.

இந்த விவசாயப் பண்ணைகளை விவசாயத் திணைக்களத்திடமா அல்லது யாரிடம் கையளிப்பது என்று இராணுவத்தினர் கோரியிருந்தனர். விவசாயத் திணைக்களத்திடம் கையளிப்பதை விட, கூட்டுறவு அமைப்புக்கள் ஊடாக மக்களிடம் நேரடியாகக் கையளிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விவசாயப் பண்ணைகளை, இராணுவத்தினரிடமிருந்து கூட்டுறவு அமைப்புகளுக்கு மாற்றுவதற்குரிய நிதியை, அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்குவதற்கு நிதி அமைச்சு இணங்கியுள்ளது.(ஐ)

# பௌத்த பிக்குவுக்கு எதிராக மட்டக்களப்பில் போராட்டம்




மட்டக்களப்பு, ஒக். 26

மட்டக்களப்பு, மங்களராமய விகாராதிபதியின் செயற்பாட்டைக் கண்டித்தும் அரச உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு வலியுறுத்தியும் செங்கலடி நகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக ஊழியர்களின் ஏற்பாட்டியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் பிரதேச செயலக ஊழியர்கள், சமுர்த்திஉத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு, ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலக முன்றிலில் ஆரம்பமான பேரணி பிரதான வீதி ஊடாக செங்கலடி சந்திவரை சென்று மீண்டும் பிரதேசசெயலக முன்றிலில் நிறைவடைந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை, மட்டக்களப்பு மயிலம்பாவெளியிலுள்ள தனியார் காணியொன்றுக்குள் நின்றிருந்த அரசமரமொன்றின் கிளைகளை அந்தக் காணியின் உரிமையாளர் வெட்டியமைக்கு மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் எதிர்ப்புத் தெரிவித்ததால் அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக சமரசம் செய்வதற்காக அந்த இடத்திற்கு சென்றஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலாளர் ந.வில்வரட்ணத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அம்பிட்டிய சுமணரத்ன தேரர் பிரதேச செயலாளரைப் பொலிஸார் முன்னிலையில் தாக்குவதற்கு முயற்சி செய்தார்.

இதையடுத்து பிரதேச செயலாளர் அவ்விடத்திலிருந்து வெளியேறி ஏறாவூர்ப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

தேரரின் இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

'இதன்போது நீதியை நிலைநாட்டும் நல்லாட்சியில் ஏன் இந்த பாகுபாடு', 'அரச இயந்திரத்தை சீர்குலைக்காதே', 'வன்முறையைப் பிரயோகிக்காதே', 'வேண்டாம்வேண்டாம்வன்முறைவேண்டாம்', 'அரச உத்தியோகத்தர்களைச் சுதந்திரமாக கடமையைச் செய்ய விடு', 'சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்து', 'மக்கள்சேவைக்கு மதிப்பளி', 'அரச உத்தியோகத்தர்களுக்கு இந்நிலை என்றால் மக்களுக்கு?' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவண்ணம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# வவுனியா நகர அபிவிருத்தி; அமைச்சர் மனோ ஆராய்வு



வவுனியா, ஒக். 26

நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன், வவுனியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். இதன்போது வவுனியா நகர அபிவிருத்திகள் தொடர்பில் நேரில் பார்வையிட்டதுடன் கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

வவுனியா நகரப் பகுதியின் பழைய பஸ் நிலையத்துக்குச் சென்ற அமைச்சர் அதனைப்பார்வையிட்டார். வர்த்தக நிலையங்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், பஸ் சேவைகள் இல்லாமையால் கடைகள் வெறிச்சோடிக்காணப்படுகின்றமை தொடர்பில் வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ்.சுஜன் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

பின்னர் நகரசபைத் தவிசாளர் இ. கௌதமனின் அழைப்பின்பேரில் இலுப்பையடிப் பகுதியிலுள்ள தினச் சந்தைக்குச் சென்று அதனைப் பார்வையிட்டார். அங்குதற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தின் பணிகள்முடிவடைந்துள்ளமை குறித்து தினச்சந்தை வியாபாரிகளினால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் தினச்சந்தைக்குப் பின்னாலுள்ள குளத்தையும் பார்வையிட்டுச் சென்றார்.

இதில் நகரசபை தவிசாளர் இ. கௌதமன், உபதவிசாளர் சு. குமாரசாமி, கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி. பாஸ்கரா, நல்லிணக்க அமைச்சின் வடக்குக்கான இணைப்பாளர் எஸ். விமலச்சந்திரன், தேசிய அமைப்பாளர் ஜனகன், வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி. நடராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# மரக்கடத்தல் முறியடிப்பு ; சந்தேக நபர்கள் தப்பினர்

மட்டக்களப்பு, தொப்பிகல நரக்கமுல்ல பிரதேச காட்டுப் பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் கடத்திவிருந்த ஒரு தொகை தேக்கு மரக்குற்றிகளையும் மூன்று வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு– புல்லுமலை வட்டார வனக் காரியாலய அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுணதீவு தாண்டியடி விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்புடன் இந்த மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மரக்கடத்தலுக் குப் பயன்படுத்தப்பட்ட லொறி மற்றும் இரண்டு உழவு இயந்திரங்களுடன் 34 தேக்கு மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சாரதிகள் உள்ளிட்ட சந்தேக நபர்கள் தப்பியோடிவிட்டதாக வட்டார வனக் காரியாலய அதிகாரி தெரிவித்தார். (ஐ)

# அலோசியஸ், பலிசேன விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 26

பர்ப்பச்சுவல் ட்ரசீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பிலான வழக்கு நேற்று மீண்டும் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி விற்பனையின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி ஆணைக்குழு ஆரம்பித்தது.

இதனடிப்படையில் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்ட அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன ஆகியோர் கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## புதிய அரசமைப்பு உருவாக்கம்: சாண் ஏற முழம் சறுக்குகின்றது

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் மென்மேலும் பின்னடைவையே கண்டு வருகின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு சுமார் தொண்ணூறு தடவைகளுக்கு மேல் கூடி, 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரி' ஓர் இடைக்கால அறிக்கையையும், அதைத் தொடர்ந்து மாதிரி யாப்புக்கான ஒரு வடிவத்தையும் கொண்டு வந்துள்ளது என்று பார்த்தால், அப்படி மலையைச் சலித்துப் பிடித்த எலியைக் கூட ஒரு சிறு துரும்பாக்கியது போன்ற வேலைதான் இப்போது இங்கு நடந்து வருவதாகப் படுகின்றது.

நேற்று அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் நடைபெற்ற விடயங்களைப் பார்க்கும் போது அப்படித்தான் தோன்றுகின்றது.

ஏற்கனவே புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை ஒன்றை வழிகாட்டல் குழு சமர்ப்பித்திருந்தது.

அதனை அரசமைப்புப் பேரவையாகக் கூடிய நாடாளுமன்றம் சுமார் ஒரு வாரகாலம் விரிவாக ஆராய்ந்தது. பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தோரும் அந்த இடைக்கால அறிக்கை குறித்துத் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

அந்தக் கருத்துக்களை எல்லாம் கோத்து – உள்வாங்கி – அவற்றின் அடிப்படையில் மாதிரி யாப்பு வடிவம் ஒன்று வழிகாட்டல் குழுவினால் தயாரிக்கப்படும் என்றும் –

அந்த மாதிரி யாப்பு வடிவத்தை அரசமைப்புப் பேரவையாகக் கூடும் நாடாளுமன்றம் பரிசீலித்து, அதனை யாப்பு வரைவாக அங்கீகரித்து, அதன் அடிப்படையில் புதிய அரசமைப்புக்கான விவாதங்களையும் கலந்துரையடல்களையும் அரசமைப்புப் பேரவையிலும் பொதுவெளியிலும் முன்னெடுக்க அது வழி செய்யும் என்றும் –

ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், மாதிரி யாப்பு வடிவமாகத் தயாரிக்கப்பட்ட ஆவணத்தை யாப்புக்கான வரைவாக ஏற்கும் அடுத்த கட்டத்துக்கு நகர்த்த விடாமல் தடுக்கும் போடும் முயற்சிகளை நேற்று கூட்டு எதிரணித் தரப்பினரும், சுதந்திரக் கட்சியினரும் வழிகாட்டல் குழுவில் எடுத்தனர். இந்த முயற்சிகளுக்கு இந்தக் காட்டத்தில் அவை முட்டுக்கட்டை போடுகின்றமையைப் பார்த்தால் இந்த விவகாரம் இதற்கு மேல் நகர்வது என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

இடைக்கால அறிக்கை தொடர்பில் அரசமைப்புப் பேரவையில் ( நாடாளுமன்றத்தில்) பல கட்சியினரும் சேர்ந்து முன்வைத்த யோசனைகள், கருத்துகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றை எல்லாம் தொகுத்து, ஒரு மாதிரி யாப்பு வடிவத்தை நிபுணர்கள் குழு தயாரித்திருந்தது.

அதனைப் புதிய அரசமைப்புக்கான மாதிரி வரைவாக ஏற்பதற்கு மறுத்து நேற்றுக் கூட்டு எதிரணியினர் பெருத்த எடுப்பில் ஆட்சேப உரைகளிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

அதனால், அரசமைப்பு மாதிரி வரைவு அரசமைப்புப் பேரவையான நாடாளுமன்றத்துக்குத் தனித்துச் சமர்ப்பிக்கப்படுவது பாதிக்கப்பட்டது.

இப்போது மொத்தமாக நான்கு விடயங்கள் – ஒட்டு மொத்தத்தில் பெரிய கட்டாக – அரசமைப்புப் பேரவைக்கு (நாடாளுமன்றத்துக்கு) சமர்ப்பிக்கப்படப் போகின்றன.

நிபுணர் குழு தயாரித்த மாதிரி யாப்பு வடிவம் –

நிபுணர் குழுவில் சிலர் தெரிவித்த மாற்றுத் திட்டங்கள் –

இடைக்கால அறிக்கைக்குப் பிற கட்சிகள் முன்வைத்தும் மாதிரி யாப்பு வடிவத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத மாற்றுத் திட்டங்கள், யோசனைகள் –

இடைக்கால அறிக்கையின் மீது அரசமைப்புப் பேரவையில் (நாடாளுமன்றத்தில்) நடந்த விவாதத்தின் போது ஒவ்வொரு அம்சம் தொடர்பிலும் கட்சிகளும் அவற்றின் பிரதிநிதிகளும் முன்வைத்த கருத்துகளின் தொகுப்பு –

என்று நான்கு அம்சங்கள் ஒன்றாகச் சமர்ப்பிக்கப்படப் போகின்றன.

ஏழாம் திகதி கூடும் அரசமைப்புப் பேரவையில் இவை அனைத்தும் கட்டாகச் சமர்ப்பிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் இவற்றின் மத்தியிலிருந்து ஓர் அரசமைப்பு வடிவ மாதிரியை – மாதிரி வரைவை – கண்டுபிடித்து விவாதத்துக்கு எடுப்பது என்பது மீண்டும் மலையைக் கெல்லும் வேலையாகிவிட்டது.

அதுவும், எதிர்வரும் 7ஆம் திகதி இந்தக் கட்டு ஆவணங்கள் எல்லாம் அரசமைப்புப் பேரவையான நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும் கூட, புதிய வரவு – செலவுத் திட்ட விவகாரங்கள் எல்லாம் பூர்த்தியான பின்னர், அடுத்த வருட ஆரம்பத்தில்தான் இந்த விடயம் பற்றி நாடாளுமன்றம் இனி ஆராயும் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆக, இந்த விவகாரம் சாண் ஏற முழம் சறுக்கும் விடயமாகி வருகிறது என்பது நிச்சயம்.

# கிளிநொச்சி பஸ் நிலையத்தின் அபிவிருத்திப் பணி ஸ்தம்பிதம்



கிளிநொச்சி, ஒக். 26

கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டு வந்து மத்திய பஸ் நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள் பல மாதங்களாகக் கைவிடப்பட்டுள்ள நிலையில் உள்ளன.

வடக்கு மாகாணத்தின் மத்தியில் அமைந்துள்ள மாவட்டமான கிளிநொச்சியின் மத்திய பஸ் நிலையத்தில் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் தென்பகுதியில் இருந்தும் வரும் பஸ்கள் நிறுத்தப்படுகின்றன. ஆயினும் அங்கு ஒரு பஸ் நிலையம் இதுவரை அமைத்து முடிக்கப்படாத நிலை நீடிக்கின்றது.

கடந்த வருடம் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகில் மாவட்டத்துக்கான மத்திய பஸ் நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அந்த பஸ் நிலையம் எந்தத் திணைக்களத்தால், எவ்வளவு நிதி ஒதுக்கீட்டில், என்ன வடிவமைப்பில் அமைக்கப்படுகிறது எனபது தொடர்பான விவரங்கள் எதுவும் காட்சிப்படுத்தப்படவில்லை.

அத்தோடு பஸ் கட்டுமானப் பணிகளும் குறுகிய காலத்துக்குள் பல தடவைகள் தடைப்பட்டு வந்த நிலையில் தற்போது பல மாதங்களாக எந்தப் பணிகளும் இன்றி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் பல தடவைகள் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதும் அவையும் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தை தொடர்பில் கொண்டு வினவியபோது, அந்த பஸ் நிலையம் அமைக்கும் பணிகள் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்றும், அதற்கும் மாவட்ட செயலகத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றும், அது குறித்து வடக்கு மாகாணப் போக்குவரத்து ஆணைக்குழுவிடமே வினவ வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு நிரந்தர பஸ் நிலையம் இன்றியெயில், மழைகாலங்களில் உள்ளூர், வெளியூர் பயணிகள் கடும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பது கவலைக்குரியதாகும். (ஐ)

# கடும் மழைக்கு மத்தியிலும் அச்சுவேலியில் போராட்டம்

## கைத்தொழிற்பேட்டை ஊழியர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி




யாழ்ப்பாணம், ஒக். 26

தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக் கோரி அச்சுவேலி மேற்கு கைத்தொழில் பேட்டை ஊழியர்கள், பொதுமக்கள் கடும் மழைக்கு மத்தியிலும் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை நடத்தினர்.

தண்ணீர், மின்சாரம் ,வீதி புனரமைப்பு போன்ற அடிப்படை வசதிகளை வழங்குமாறு கோரியே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டம் அச்சுவேலி–சங்கானை வீதியில் இருந்து ஆரம்பமாகி இராச வீதி–கைத்தொழில் பேட்டை வீதியுடன் நிறைவு பெற்றறு .

அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டையில் கைத்தொழிற்சாலைகள் இயங்குகின்றன. 28 தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தொழிற்பேட்டைக்குச் செல்லும் வீதி 50 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பின்றிக் காணப்படுகிறது.

அந்தப் பிரதேசம் தண்ணீர், மின்சாரவசதியின்றிக் காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அடிப்படை வசதி ஏற்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட தரப்பிடம் கோரிக்கை விடுத்தும் எதுவித பயனும் இல்லாத நிலையில் நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-07)

## சாரணர்களின் விஜயதசமி விழா



'யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர் குழுவின் விஜயதசமி விழா கடந்த வெள்ளிக்கிழமை சாரணர் குழுத் தலைவர் செல்வன்.சி.பிரணவன் தலைமையில் சாரணர் பயிற்சி கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது சாரணர்கள் தமது சாரணர் பயிற்சி உபகரணங்கள் போன்றவற்றை வைத்து வழிபட்டனர். இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் ச.நிமலன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்ததுடன் குழு சாரணப் பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன் நிகழ்வுகளைச் சிறப்புற ஒழுங்கமைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ராணுவ அதிகாரி உட்பட மூன்று படையினர் கைது

கொழும்பு, ஒக். 26

சியம்பலாண்டுவ பகுதியில் வைத்து 3 ஆயிரம் ரி–56 ரக துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் இராணுவ அதிகாரியொருவரும் இரு இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டுள்ளனர் .

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் இவர்கள் மூவரும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## நாளை

27.10.2018
சனிக்கிழமை

நட்சத்திரம்: கார்த்திகை மு.ப. 10.24 வரை
திதி :திருதியை மு.இ. 8.18 வரை
சுபநேரம் : 3.03 – 4.33 வரை
இராகுகாலம் : 9.03 – 10.33 வரை

# தோட்டத் தொழிலாளர்கள் சம்பளத்தை ரூ.600 இற்கு மேல் உயர்த்தவே முடியாது

## முதலாளிமார் சம்மேளனம் திட்டவட்டம்

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 600 ரூபாவுக்கு மேல் அதிகரிக்க முடியாதென முதலாளிமார் சம்மேளனம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே முதலாளிமார் சம்மேளனம் இதனைத் தெரிவித்துள்ளது.

முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் தெரிவிக்கையில்–

ஒரே நேரத்தில் ஆயிரம் ரூபா சம்பளத்தை அதிகரிக்க முடியாது எனத் தொழிற்சங்கங்களுக்கும் தெரியும். எனினும் அவர்கள் அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுத் தருவோம் என மக்களை ஏமாற்றி கொண்டிருக்கின்றனர்.

அரச ஊழியர்களைவிட தோட்டத் தொழிலாளர்கள் இன்று அதிகமாகச் சம்பளத்தைப் பெறுகின்றார்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிக சலுகைகளை வழங்குகிறோம்.

ஆனால் தற்போது அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாவைக் கேட்பது நியாயமற்றது. ஆயிரம் ரூபாவை வழங்க முடியாது எனத் தொழிற்சங்க அரசியல்வாதிகளுக்குத் தெரியும்.

எனினும் அவர்கள் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். என்னதான் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டாலும் எமது தீர்மானத்தில் இருந்து மாறப்போவதில்லை–என்றனர். (ஐ)

# வடக்கில் மின் கட்டணப் பட்டியல்களை மாதாந்தம் வழங்குவதில் தாமதம் ஏன்?

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்பி கேள்வி



கொழும்பு, ஒக். 26

வடக்கு மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் மின் பாவனையாளர்களுக்கு மின் கட்டணச் சிட்டைகளை மாதாந்தம் விநியோகிப்பதில் தொடர்ந்து ஏற்பட்டுவருகின்ற தாமதங்களுக்கான காரணம் என்ன என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டியவிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற கேள்வி நேரத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தனது உரையில் –

யாழ்ப்பாணம், தென்மராட்சி பகுதியிலுள்ள தென் மட்டுவில், மட்டுவில், கைதடி, நுணாவில், நுணாவில் மேற்கு போன்ற கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மின் பாவனையாளர்களுக்குக் கடந்த ஜூன் மாதம் மின் பாவனை கட்டணச் சிட்டைகள் வழங்கப்பட்ட பின்னர், ஒக்ரோம்பர் மாதம் வரை வழங்கப்படவில்லை என்றும், இத்தகைய நிலையில் அண்மையில் மின் பாவனைக் கட்டண நிலுவையைச் செலுத்தாவிடில் மின் இணைப்பு துண்டிக்கப்படுமெனக் குறிப்பிட்டு, இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம், கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் பல மாதங்களாக மின் பாவனைக் கட்டணச் சிட்டைகள் பாவனையாளர்களுக்கு வழங்கப்படாதிருந்து எவ்விதமான முன்றிவித்தலும் இன்றி கடந்த 11ஆம் திகதி மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதால், அந்த மக்கள் பாரிய பாதிப்புகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, பரீட்சைக்குத் தோற்றிவருகின்ற பாடசாலை மாணவர்கள், குழாய்க் கிணறுகள் மூலமாக நீரைப் பெறுவோர், கடுமையான நோயாளிகள் போன்றோர் பாரிய பாதிப்புகளை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மின் பாவனை கட்டணச் சிட்டைகள் வழங்குவதில் ஏற்படும் பல மாத காலத் தாமத நிலைமையானது இன்று நேற்றல்ல, கடந்த சில வருடங்களாகவே வடக்கு மாகாணத்தில் பல பகுதிகளிலும் காணப்படுகின்றது.

அந்தவகையில் வடக்கு மாகாணத்தில் பல்வேறு பகுதிகளில் மின் பாவனையாளர்களுக்கு மின் கட்டணச் சிட்டைகளை மாதாந்தம் விநியோகிப்பதில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் தாமதங்களுக்கான காரணம் என்ன?

வாழ்வாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண மக்களுக்கு, மாதா மாதம் ஒழுங்கு ரீதியில் மின் கட்டண சிட்டைகள் வழங்கப்படாமல், பல மாத கட்டணச் சிட்டைகளை ஒரே தடவையில் வழங்கி, அந்தத் தொகையைச் செலுத்தா விடத்து, மின் துண்டிக்கப்படும் என இறுதி அறிவித்தல் வழங்குவதிலும், மின் விநியோகத்தை துண்டிப்பதிலும் நியாயம் இல்லை என்பதால், மேற்படி மின் பாவனையாளர்களது நிலுவையைத் தவணை அடிப்படையில் அறவிடுவதற்கும், மின் விநியோகத் துண்டிப்பை மேற்கொள்ளாதிருப்பதற்கும், மின் விநியோகம் துண்டிக்கப்பட்டவர்களுக்கு அதன் அடிப்படையில் மீள மின் விநியோகத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க முடியுமா?

மின் சிட்டைகளை வழங்குவதற்கோ அல்லது மின் மானி வாசிப்பிற்கோ ஆளணிப் பற்றாக் குறைகள் இருப்பின், வடக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்புகளின்றி ஆயிரக் கணக்கானோர் இருக்கின்ற நிலையில், அவர்களிடமிருந்து மேற்படி ஆளணியைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா?

வடக்கு மாகாணத்தைச் சாராத வேறு மாகாணங்களிலிருந்து வடக்கின் மின்சார சபைகளுக்கான ஆளணிகள் நிரப்பப்பட்டுள்ளனவா? நிரப்பப்பட்டுள்ளன எனில், மாவட்ட ரீதியில் அவ்வாறு இணைக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கை யாது? அதற்கான காரணங்கள் என்ன?–என்றார். (ஐ)

# மலவாசலில் மாணிக்கல் கடத்திய நபர் சிக்கினார்



சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் ஒருதொகைமாணிக் கக்கற்களைக்கடத்தி வர முற்பட்ட இலங்கையர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார் எனச் சுங்க அதிகாரி தெரிவித்தார்.

பேருவளையைச் சேர்ந்த 25 வயதான வியாபாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்றுக் காலை ருவாண்டாவிலிருந்து கட்டார் விமான மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்தடைந்தபோது குறித்த நபரின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த விமான நிலையச் சுங்க அதிகாரிகள் அவரை சோதனையிட்டபோது, இந்த நபரின் மலவாசலில் மறைத்து வைத்திருந்த ஒரு தொகை மாணிக் கக்கற்களை கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 4 இலட்சம் பெறுமதியான 329 கிராம் நிறைகொண்ட மாணிக்கக்கற்களை அந்த நபரிடமிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டரை மேலதிக விசாரணைகளுக்குட்படுத்தியுள்ளதாக விமான நிலையச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# ஜனாதிபதி கொலைச்சதியுடன் பொன்சேகாவுக்கும் தொடர்பு

## நாமல் குமார அதிரடித் தகவல்



கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்யும் சதி முயற்சியில் முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத்பொன்சேகாவுக் குத் தொடர்பிருப்பதாக நாமல் குமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கொலைச் சதி குறித்து தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமுன்னாள்பிரதிப்பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா சரத் பொன்சேகாவின் நெருங்கிய நண்பர்.

இந்தச் சதி முயற்சியின் பின்னயில் இருப்பவர் சரத்பொன் சேகா என்பது எனக்குத் தெரியும். சி.ஐ.டியினருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் நான் சரத்பொன் சேகா குறித்து தெரிவித்திருக் கின்றேன்.

இதன் காரணமாகவே சரத் பொன்சேகா சீற்றமடைந்துள்ளார். என்னைப் பற்றி விமர்சனங்களை முன்வைத்துள்ளார் –என்றார். (ஐ)

# மழையுடனான காலநிலை சில நாள்களுக்கு தொடரும்

## 3 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்



கொழும்பு, ஒக். 26

நாட்டில் தற்போது காணப்படும் மழையுடனான சீரற்ற காலநிலை அடுத்த சில நாள்களுக்கும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

நாட்டில் மேகமூட்டமான வானம் காணப்படும். நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100–150 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், ஊவா, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்புகளில் பலமான மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மட்டக்களப்பில் இருந்து காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்று வடகிழக்குத் திசையில் இருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20–30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது மாறுபட்ட திசைகளில் இருந்து வீசுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 10–20 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் – என்றுள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக விக்டோரியா நீர்த்தேக்கம் மற்றும் தப்போவ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகளும் தப்போவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகளும் நேற்று முன்தினம் இரவு முதல் திறக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது.

மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (ஐ)

# தமிழக சட்டசபையில் 18 எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்தமை சரியே எனத் தீர்ப்பு

## 18 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடத்த விதிக்கப்பட்டிருந்த தடையும் விலக்கப்பட்டது

சென்னை, ஒக்.26

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமிக்கு எதிராக ஆளுநரிடம் கடிதம் கொடுத்த அ.தி.மு.கவின் சட்டசபை உறுப்பினர்கள் 18 பேரையும் சபாநாயகர் தனபால் தகுதி நீக்கம் செய்மை சரியே என்று சென்னை உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

சபாநாயகரின் முன்னைய முடிவை எதிர்த்து 18 சட்டமன்ற உறுப்பினர்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, நீதிபதி எம்.சுந்தர் ஆகியோர் மாறுபட்ட தீர்ப்பை வழங்கியதால் 3வது நீதிபதியின் விசாரணைக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

அதன்படி மூன்றாவது நீதிபதியான சத்யநாராயணன் வழக்கை விசாரித்து வந்தார். வழக்கு விசாரணை முடிவடைந்த நிலையில், நேற்றுக் காலை 10.30 மணிக்கு இந்த வழக்கின் தீர்ப்பை அவர் வழங்கினார்:-

தீர்ப்பின் முக்கிய அமசங்கள் வருமாறு:-





★ என்னுடைய தனிப்பட்ட பார்வை இது. முன்னாள் தலைமை நீதிபதி இந்திரா பான்ர்ஜி, நீதிபதி எம்.சுந்தர் தீர்ப்பை பின்பற்றவில்லை.

★ 18 எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்து சபாநாயகர் தனபால் பிறப்பித்த உத்தரவு செல்லும்.

★ சபாநாயகர் முடிவில் தவறு இல்லை; தகுதிநீக்கம் சட்டவிரோதமானது இல்லை.

★ இதனால் 18 எம்.எல்.ஏக்களின் மனுக்களும் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

★ 18 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடத்த விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படுகிறது.

★ சட்டசபையில் மாநில அரசின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்பை நடத்த கூடாது என்ற தடை நீக்கப்படுகின்றது.

★ சபாநாயகர் தனபால் முறையான கால அவகாசம் கொடுத்து சரியானபடியே நடவடிக்கை எடுத்து உள்ளார்.

★ அரசு கொறாடா பிறப்பித்த உத்தரவின் அடிப்படையை ஆராய்ந்து பார்த்தே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சாட்சியத்தையும் ஆராய்ந்து பார்த்துதான் தீர்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

★ இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில் தன்னிச்சையாக தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

# எம்.எல். ஏக்கள் தகுதி நீக்கம்; இதுவரை நடந்தவை என்ன?



## தமிழக சட்டமன்ற சர்ச்சை பற்றிய தொகுப்பு

தமிழக சட்டப்பேரவையில் டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவாக செயல்பட்டுவரும் 18 அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டமையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் காலையில் தீர்ப்பு வழங்குகிறது.

இந்த விவகாரம் கடந்து வந்த பாதை வருமாறு:-

1. 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி அப்போதைய பொறுப்பு ஆளுநர் சி. வித்யாசாகர் ராவைச் சந்தித்த டி.டி.வி. தினகரன் ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் 19 பேர் முதலமைச்சருக்கு தாங்கள் அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்கிறார்கள் எனத் தெரிவித்தனர்.

2. இந்த 19 பேரிடமும் விளக்கம் கேட்டு அ.தி.மு.கவின் கொறடா ராஜேந்திரன் நோட்டீஸ் அனுப்பினார். இவர்களது செயல், தானாக முன்வந்து அ.தி.மு.கவின் உறுப்பினர் தகுதியிலிருந்து வெளியேறுவதற்குச் சமம் என்பதால் இந்த 19 பேர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ராஜேந்திரன் சபாநாயகரிடம் ஓகஸ்ட் 24ஆம் திகதியன்று கோரினார்.

3. இந்தப் 19 பேரில் எஸ்.டி.கே. ஜக்கையன் பிறகு ஆளும் பிரிவுக்கு ஆதரவாளராகி விட்டார். செப்டம்பர் 17ஆம் தேதியன்று சபாநாயகரைச் சந்தித்த அவர், டி.டி.வி தினகரன் தரப்பினர் தன்னை வற்புறுத்தி ஆளுநரை சந்திக்க அழைத்துச் சென்றுவிட்டனர் எனத் தெரிவித்தார்.

4. மீதமுள்ள 18 பேரையும் தகுதி நீக்கம் செய்வதாக சபாநாயகர் தனபால் செப்டம்பர் 18ஆம் திகதியன்று அறிவித்தார். தமிழக சட்டப்பேரவையின் 1986ஆம் ஆண்டு விதிகளின்படியும் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படியும் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

5. இதன் மூலம் தமிழக சட்டமன்ற உறுப்பினர்களில் டி.டி.வி தினகரனுக்கு ஆதரவாகச் செயல்பட்டுவந்த தங்க தமிழ்ச்செல்வன் (ஆண்டிப்பட்டி), ஆர். முருகன் (அரூர்), எஸ். மாரியப்பன் கென்னடி (மானாமதுரை), கே.கதிர் காமு (பெரியகுளம்), சி. ஜெயந்தி பத்மநாபன் (குடியாத்தம்), பி. பழனியப்பன் (பாப்பிரெட்டிப்பட்டி), வி. செந்தில் பாலாஜி (அரவக்குறிச்சி), எஸ். முத்தையா(பரமக்குடி), பி. வெற்றிவேல் (பெரம்பூர்), என்.ஜி. பார்த்திபன் (சோளிங்கர்), எம். கோதண்டபாணி (திருப்போரூர்), டி.ஏ. ஏழுமலை (பூந்தமல்லி), எம். ரங்கசாமி (தஞ்சாவூர்), ஆர். தங்கதுரை (நிலக்கோட்டை), ஆர். பாலசுப்பிரமணி (ஆம்பூர்), எதிர்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன் (சாத்தூர்), ஆர். சுந்தர்ராஜ் (ஓட்டப்பிரடாரம்), உமா மகேஸ்வரி (விளாத்திகுளம்) ஆகியோர் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

6. இந்தத் தகுதி நீக்க நடவடிக்கையை எதிர்த்து 18 சட்டமன்ற உறுப்பினர்களும் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகினர். இந்த வழக்கை முதலில் விசாரித்த நீதிபதி எம். துரைசாமி, மறு உத்தரவு வரும் வரை இந்த 18 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடத்தக்கூடாது, சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தக் கூடாது என செப்டம்பர் 20ஆம் திகதியன்று இடைக்காலத் தடைவிதித்தார்.

7. இந்த வழக்கு நீதிபதி கே. ரவிச்சந்திரபாபுவுக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்குகளில் அரசியல் சாசனம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் இருப்பதால் வழக்கு டிவிஷன் அமர்வுக்கு மாற்றப்பட்டது.

8. அப்போதைய உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி மற்றும் சுந்தர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்துவந்தது. ஜனவரி 23ஆம் திகதியன்று வழக்கின் இறுதி வாதங்கள் முடிவடைந்த நிலையில் ஜூன் 14ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

9. நீதிபதி இந்திரா பானர்ஜி, சபாநாயகரின் உத்தரவு செல்லுமென அறிவித்தார். அதே அமர்வின் சக நீதிபதியாக இருந்த சுந்தர், சபாநாயகரின் தீர்ப்பு செல்லாது என அறிவித்தார். இரு நீதிபதிகளின் தீர்ப்பும் முரண்பட்டிருப்பதால், வழக்கு மூன்றாவது நீதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டது.

10. மூன்றாவது நீதிபதியாக எஸ். விமலா அறிவிக்கப்பட்டார். ஆனால், இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து மாற்றி உச்ச நீதிமன்றமே விசாரித்து விரைந்து தீர்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி, தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏக்களில் 17 பேர் உச்ச நீதிமன்றத்தை அணுகினர். ஆண்டிப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தங்கதமிழ்ச் செல்வன் இதில் இணைந்துகொள்ளவில்

11. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், 17 சட்டமன்ற



உறுப்பினர்களும் தாக்கல் செய்த மனு சரியானதல்ல; அந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றமே விசாரிக்கும் என்றும் வேண்டுமானால், வழக்கை விசாரிக்கும் நீதிபதியை மாற்றலாம் என தெரிவித்தனர். இதையடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் தரப்பு, தங்கள் மனுவை திரும்பப் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டது. ஆகவே இந்த வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்ட எஸ். விமலாவுக்குப் பதிலாக எம். சத்யநாராயணா விசாரிப்பார் என்று நீதிபதிகள் அறிவித்தனர்.

12. இந்த வழக்கில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

234 இடங்களைக் கொண்ட தமிழக சட்டப்பேரவையில் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினரும் தி.மு.க. தலைவருமான மு. கருணாநிதி, திருப்பரங்குன்றம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே. போஸ் ஆகியோர் மரணமடைந்துவிட்டமையால், 232 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் தி.மு.க. 88 உறுப்பினர்களையும் காங்கிரஸ் எட்டு உறுப்பினர்களையும் கொண்டிருக்கின்றன. டிடி.வி. தினகரன் சுயேச்சையாக வெற்றி பெற்றிருக்கிறார். 18 உறுப்பினர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

மீதமுள்ள 117 சட்டமன்ற உறுப்பினர்களில் எஸ். கருணாஸ், தமீமுன் அன்சாரி, தனியரசு ஆகியோர் அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றமையால் அவர்களும் அ.தி.மு.கவின் உறுப்பினர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்களில் கருணாஸ் வெளிப்படையாக ஆளும் எடப்பாடி பழனிச் சாமி அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார். மீதமுள்ள இருவரும் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

# பத்திரிகையாளர் கசோக்கி கொலையில் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படுவர்

## அமெரிக்கா திட்டவட்டம்



வொஷிங்டனொக்26

சவுதி அரேபிய பத்திரிகையாளர் கசோக்கி கொலையில் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

சவுதி அரேபியாவை சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி (வயது 60), சவுதி அரேபிய மன்னராட்சியைப் பற்றியும், பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானையும் கடுமையாக விமர்சித்து எழுதி வந்தார்.

இந்த நிலையில் அவர் துருக்கியில் இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி தூதரகத்துக்கு கடந்த 2ஆம் திகதி சென்றிருந்தபோது, அங்கு வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

முதலில் இதை ஒப்புக்கொள்ள மறுத்த சவுதி அரேபியா பின்னர் ஒப்புக்கொண்டது.

கசோக்கியின் படுகொலை, பல நாள்களுக்கு முன்பே சதித்திட்டம் தீட்டி நிறைவேற்றப்பட்ட ஒன்று என்று துருக்கி அதிபர் எர்டோகன், தன் கட்சி எம்.பி.க்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

முன்கூட்டியே திட்டமிட்டு அவர் கொல்லப்பட்டதற்கு வலுவான ஆதாரங்கள் துருக்கியிடம் உள்ளன என்றும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர், கசோக்கியின் படுகொலை மிக மோசமாக நடத்தப்பட்டுள்ளது. வரலாற்றில் மூடி மறைக்கப்பட்ட வியங்களில், இது மிக மோசமாக மறைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

அவரைக் கொலை செய்ய வேண்டும் என்று எண்ணியவர்கள், மிகப்பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளனர் என்றும் டிரம்ஸ் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோ உறுதியான கருத்துக்களை தெரிவித்துள்ளார். அவர் கூறியவை வறுமாறு:–

கசோக்கி படுகொலையில் தொடர்புடைய சவுதி அரேபிய அதிகாரிகள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்குரிய விசாக்கள் ரத்து செய்யப்படுகின்றன. அவர்கள் மீது பொருளாதார தடை விதிக்க பரிசீலிக்கப்படுகிறது.

இந்த தண்டனை, அமெரிக்காவின் கடைசி தண்டனை ஆகிவிடாது. அவர்களை பொறுப்பேற்க வைப்பதற்கான வழிமுறைகளை நாங்கள் கண்டுபிடிப்போம். தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

கசோக்கி படுகொலையில் தொடர்புடைய உண்மைகள் அத்தனையையும் கண்டறிய முயற்சிப்போம். நாடாளுமன்றத்தைக் கலந்து ஆலோசிப்போம். இந்த விவகாரத்தில், பிற நாடுகளுடனும் இணைந்து செயல்படுவோம். கசோக்கி படுகொலை போன்ற இரக்கமற்ற செயல்களை அமெரிக்கா பொறுத்துக்கொள்ளாது.– என்று அவர் கூறினார்.

இதற்கிடையே கசோக்கி படுகொலையில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நா. சபை எழுப்பி உள்ளது.

# அமெ. லொட்டரிச் சீட்டில் ரூ. 27ஆயிரம் கோடி பரிசு

## வரலாற்றில் முதல் தடவையாகப் பெரும் தொகை




அமெரிக்காவில் இதுவரை இல்லாத வகையில் லொட்டரியில் ஒரு சீட்டுக்கு இந்தியப் பணத்தில் 12,000 கோடி ரூபா(இலங்கைப் பணத்தில் சுமார் 27 ஆயிரம் கோடி ரூபா )பரிசு கிடைத்துள்ளது.

அமெரிக்காவிலும் பல்வேறு லொட்டரிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் மெகா மில்லியன்ஸ் நிறுவனம் அவ்வப்போது அதிக பரிசுத்தொகையுடன் லொட்டரியை அறிமுகப்படுத்தி வாடிக்கையாளர்களை கவர்ந்து வருகிறது. அந்த வகையில் அமெரிக்காவில் இதுவரை இல்லாத அளவு முதல் பரிசாக இந்திய ரூபாய் மதிப்பில் 12 ஆயிரம் கோடி அறிவித்தது.

இந்த லொட்டரி குலுக்கல் தற்போது முடிந்துள்ள நிலையில் தெற்கு கரோலினாவில் இந்த லொட்டரி விற்பனையாகியுள்ளது. இதற்கான எண்களாக 5, 28, 62, 65, 70 அறிவிக்கப்பட்டது. இது அமெரிக்காவில் இதுவரை இல்லாத பரிசாகக் கருதப்படுகிறது. இந்த பரிசு பெறும் நபர் யார் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை.

அதேசமயம் அவருக்கு வரிகள் மற்றும் செலவுகள் போக 6 ஆயிரத்து 500 கோடி ரூபா ( இலங்கைப் பணத்தில் சுமார் 14 ஆயிரம் கோடி ரூபா) பரிசுத்தொகை வழங்கப்படும் எனத் தெரிகிறது. இந்த லொட்டரி அறிமுகம் செய்யப்பட்டபோது மோல்கள், வணிக வளாகங்கள், பார்கள் என அனைத்து இடங்களிலும் இந்த லொட்டரி விற்றுத் தீர்ந்தது. இந்திய ரூபாய் மதிப்பில் குறைந்தபட்சம் 150 ரூபாய் மதிப்பு கொண்ட இவை மொத்தம் 30 கோடி என்ற எண்ணிக்கையில் விற்பனையாகின எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்பாக 2016ஆம் ஆண்டு நடந்த லொட்டரியில் இந்திய ரூபாய் மதிப்பில் 10 ஆயிரம் கோடி ரூபா அளவுக்குப் பரிசு அறிவிக்கப்பட்டது. இதுவே அமெரிக்காவில் இதுவரை அதிக பரிசுத்தொகையாக கருதப்பட்டது. இதனை மூன்று பேர் பிரித்துக் கொண்டனர். தற்போது அதைவிட அதிகமாக 12 ஆயிரம் கோடி ரூபா பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பத்திரிகையாளர் கசோகி கொலைக்கு காரணமானோர் தண்டிக்கப்படுவார்கள்

## சவுதி இளவரசர் சல்மானும் திடீர் அறிவிப்பு



சவுதிப் பத்திரிகையாளர. ஜமால் கசோகியின் மரணத்துக்கு காரணமானவர்கள் நிச்சயம் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் தெரிவித்திருக்கிறார்.

பத்திரிகையாளர் ஜமால் கொலை வழக்கில் துருக்கி வெளியிட்ட ஆதாரங்களின் அடிப்படையில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கு எதிராகப் பல்வேறு தரப்புகளிலிருந்து விமர்சனங்கள் எழுந்து வருகின்றன.

இந்த நிலையில் இது தொடர்பாக ஷரியாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் பேசும்போது, சவுதி மக்கள் அனைவரும் வருந்தும்படி இந்தக் கொலை நடந்துள்ளது. இந்தக் குற்றத்துக்குக் காரணமானவர்கள் நிச்சயம் கடுமையான தண்டனை பெற நான் உறுதியாக இருக்கிறேன். நீதியே நிச்சயம் வெல்லும். ஜமாலின் கொலையைப் பயன்படுத்தி துருக்கி, சவுதி இடையே மோதல் ஏற்படுத்த சிலர் முயற்சி செய்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரக அலுவலகத்தில் கொல்லப்பட்ட ஜமால் கசோகியின் கொலை வழக்கில் தொடர்புடைய சவுதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத் துருக்கி கடந்த வாரம் வெளியிட்டது.

ஜமாலை சவுதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான வீடியோ மற்றும் ஆடியோ ஆதாரத்தை துருக்கி வெளியிட்டது.

துருக்கியில் உள்ள சவுதி அரேபியா தூதரகத்தின் உள்ளே ஜமாலின் விரல்கள் துண்டிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு, பின்னர் அவரது தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார் எனவும் துருக்கி சமீபத்தில் குற்றம் சாட்டியது. இதனைத் தொடர்ந்து ஜமால் கொல்லப்பட்டதை சவுதி ஒப்புக்கொண்டது.

இந்த விவகாரம் சர்வதேச அளவில் சவுதிக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத்தை பாக். ஒடுக்காவிட்டால் பொறுப்பேற்க வைக்குமாம் அமெரிக்கா!



வொஷிங்டன்,ஒக்.26

பயங்கரவாதத்தை ஒடுக்காவிட்டால் பொறுப்பேற்க வைப்போம் என பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது என்றும், பயங்கரவாதிகளை அந்த நாடு பாரபட்சமின்றி ஒடுக்குவதில்லை என்றும், இது குறித்து அமெரிக்கா, பல முறை சுட்டிக்காட்டியும், பாகிஸ்தான் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் கூறப்படுகின்றது. இதனால் அந்த நாட்டின் மீது அமெரிக்கா கடும் அதிருப்தியில் உள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் அமெரிக்க வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோ வொஷிங்டனில் இது குறித்து நிருபர்களிடம் பேசினார்.

அப்போது அவர் கூறுகையில், பாகிஸ்தான் தனது மேற்கு எல்லையில் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுக்காவிட்டால், அவர்களைப் பொறுப்பேற்க வைப்போம். கடந்த செப்டம்பர் மாதம் பாகிஸ்தான் சென்று, அந்த நாட்டின் பிரதமர் இம்ரான்கானை சந்தித்துப் பேசியபோது, இதைத் தெளிவுபடுத்தினேன் என்று குறிப்பிட்டார்.

தெற்கு ஆசியாவுக்கும், மத்திய ஆசியாவுக்குமான அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என்பதையும் பாகிஸ்தான் பிரதமரிடம் தெளிவுபடுத்தி விட்டேன். மேற்கு எல்லையில் பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளிக்கக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டி உள்ளேன் என்றும் மைக் பாம்பியோ கூறினார்.

மேலும், எல்லா பயங்கரவாதிகளையும் பாரபட்சம் இல்லாத வகையில் ஒழித்துக்கட்ட பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது வரையில், அந்த நாட்டுக்கான நிதி உதவியை நிறுத்தி வைக்கும் டிரம்ப் நிர்வாகத்தின் முடிவில் மாற்றம் இல்லை எனவும் மைக் பாம்பியோ கூறினார்.

**நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஆரம்பிப்பது தொடர்பில் - அவரது முடிவை சிலாகித்து 'கூர்மை' இணையத்தில் பிரசுரமாகியுள்ள கட்டுரை இது.**

# கூட்டமைப்பின் அதே பிறழ்வுக்கு பலியாகாமல் விக்கி செயற்படுவாரா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கை பிறழ்ந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை உச்சாடனம் செய்தவாறு, தனது புதிய கட்சி தொடர்பான அறிவித்தலை புதனன்று தந்திருக்கிறார் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன். தாம் பிறழ்த்திய கொள்கையைக் கூடத் தாமே கடைப்பிடிக்காது திரிபுபடுத்தும் தமிழரசுக் கட்சியின் தலைமையை விட நீதியரசர் விக்னேஸ்வரன் ஆயிரம் மடங்கு நேர்மையானவர். ஆகவே தமிழர் தரப்பு அரசியற்கட்சிகளுக்குள் ஒரு நல்ல தலைமை தரவல்ல ஒரு தந்தையாகப் பரிணாமம் பெறும் அவரை மனமார்ந்து வரவேற்கவேண்டியது ஈழத்தமிழ்த் தேசியப் பற்றுள்ள அனைவரதும் கடன். அதேவேளை, நீதியரசரும் தமிழ் மக்கள் பேரவையும் இன்ன பிறரும் சேர்ந்து இங்கு பிறழ்ந்திருக்கும் கொள்கை என்ன என்பதையும் ஈழத்தமிழ் மக்கள் விளங்கியிருந்தாலே தமது தலைமையை நேர்வழியில் ஆற்றுப்படுத்தமுடியும்.

வட மாகாண முதலமைச்சராக நீதியரசர் விக்னேஸ்வரன் தேர்தல் அரசியலுக்குள் பிரவேசித்தபோது அவருக்கிருந்த தமிழ்த்தேசிய அரசியற் புரிதலில் பல கோளாறுகள் இருந்தன.

ஆனால், காலப்போக்கில் தனது அரசியற் புரிதலை மேம்படுத்திக்கொண்டார். விளைவாக, ஒரு நல்ல முதலமைச்சராக அவர் விருத்தி கண்டார்.

இதற்கு அவரது சுயநலம் சாராத பண்பும், நுண்ணறிவாற்றலும், உயரச் சென்றாலும் கடமையுணர்வுடன் நேரம் ஒதுக்கிக் கருமமாற்றும் பொறுப்புணர்வுப் பாங்கும் பேருதவியாகின.

தமிழர் அரசியலில் மாகாணசபை முதலமைச்சராகி மேம்பட்ட ஒருவர் அவர் மட்டுமே.

**நல்லதோர் முடிவு**

தற்போது தமிழ்த்தேசியத்தின் அடுத்த கட்டச் சாரதியாகப் பயணிக்கத் தயாராகியிருக்கிறார்.

அவ்வாறு அவர் தயாராக மாட்டாரா என்று ஏங்கிக்கிடந்தவர்கள் பலர். அவர்கள் அனைவருக்கும் ஒரு நற்செய்தியாக அவரது கட்சி அமைப்பதான முடிவு அமைந்திருக்கிறது.

ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஆழமாக அணுகும் ஒரு மனிதர் சாரதியாக வருவது அருமையானதொரு விடயம் அல்லவா?

காலத்தால் குறுகிய பயணமாக இருந்தாற்கூட காத்திரமான பயணமாக அது இருக்கவேண்டும் என்பதே கொள்கை சார்ந்தோர் அனைவரதும் விருப்பு.

ஆக, இந்தப் பயணம் நற்பயணமாக, சிந்தனைத் தெளிவோடு விரைந்து கடமையாற்ற வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியத்தின் காவலர்களாகத் தங்களை உணர்ந்துகொள்ளும் ஒவ்வொருவரையும் சார்ந்திருக்கிறது.

இதற்கானதெளிவைப்பெற்றுக்கொள்ள அவசியமான விவாதத்துக்கான அடிப்படைகள் சிலவற்றைக் கூர்மை இணையம் இந்தக் கட்டுரையில் முன்வைக்கிறது.

எளிமையாக, அனைவருக்கும் புரியும் வகையில் முன்வைக்கப்படும் இந்தக் கருத்துகளின் தொடர்ச்சி எதிர்வரும் நாள்களிலும் வெளிவரும்.

**சமஷ்டித் தீர்வைக் கோரிக்கையாக முன்வைப்பது தமிழ்த் தேசிய நிலைப்பாடு அல்ல.**

ஈழத்தமிழர்கள் சமஷ்டியைத் தமது கொள்கையாக முன்வைத்த காலம் தமிழர் அரசியற்பாதையில் மலையேறிவிட்டதென்றும் இனிமேல் தமிழர்கள் தமது கொள்கையாகச் சமஷ்டியை முன்வைக்க முடியாதென்றும் தந்தை செல்வாவின் காலத்திலேயே அறுதியும் இறுதியுமாக முடிவெடுத்தாகிவிட்டது.

தமிழரசுக் கட்சி என்ற 'பெடரல் பாட்டி'யைச் சுருட்டிக் கட்டிவைத்துவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியைத் தந்தை செல்வா உருவாக்கினார்.

**அமிரின் முடிவுகள்**

1983 இல் ஆறாம் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அப்போது எதிர்க் கட்சித்தலைவராக இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தனது பதவியை அறத்தோடும் மறத்தோடும் இராஜினாமாச் செய்தமைக்கும் இதுவே பின்னணி.

பிற்காலத்தில் இந்தியாவின் தூண்டுதலுக்கு ஆளாகி அதே ஆறாம் சட்டத்திருத்தத்துக்கு அடிமையாகப் பிரமாணம் செய்துகொண்டதென்பது அவர் பிறழ்ந்து போன வரலாற்றின் பிறிதொரு அத்தியாயம்.

தனிமனிதர்களாகப் பலர் கொள்கை பிறழ்ந்து போவதைக் கண்டு வந்தது ஈழத் தமிழர் வரலாறு.

ஏன், ஒரு கட்சி பிறழ்ந்த கொள்கை வைத்திருப்பது கூட, ஒருவகையில் சகித்துக்கொள்ளப்படக் கூடியதே.

ஆனால், பிறழ்ந்த கொள்கையை வைத்துக்கொண்டு தங்கள் கட்சியே பேச்சுவார்த்தையில் நேரடியாக ஈடுபடும் ஆணை கொண்ட தமிழ் மக்களின் தலைமை என்று பிரதிக்ஞை தீட்டுவது சாதரண பிறழ்வல்ல, அதல பாதாளப் பிறழ்வாகும்.

இந்தப் பிறழ்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2009 மே மாதம் வரை செய்யவில்லை.

**கொள்கைப் பிறழ்வு**

ஆனால், அதன் பின்னர் பிறழ்வையே கொள்கையாக்கி, அதையே மக்கள் ஆணைபோல பாவனை செய்து, தேர்தல் விஞ்ஞாபனமாக்கியது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு.

விக்னேஸ்வரனும் அதே கொள்கைப் பிறழ்வுப் பொறிக்குள் மாட்டிக்கொண்டிருக்கிறார் என்பதை அவரது உரை வெளிப்படுத்தியிருப்பது கவலைக்குரியது.

**சமஷ்டி தொடர்பான எந்த நிலைப்பாடு பொருத்தமானது?**

தமிழர்கள் தங்கள் கொள்கையாகவோ, மாதிரி யாப்புகளாகவோ சமஷ்டியைச் சித்திரித்துக் கனவு காணுவது அடிப்படையில் வரலாற்றுப் பிறழ்வாகிறது.

ஆனால், அதன் அர்த்தம் சமஷ்டியை நிராகரிப்பது என்றும் பொருள்படாது.

பொருத்தமான தமிழ்த் தேசியப் பொருள்கோடல் என்னவென்றால், சமஷ்டி முறையிலான தீர்வொன்றை இலங்கை அரசு சர்வதேச மத்தியஸ்தத்துடன் முன்வைத்தால் பரிசோதிக்கலாம் என்பதே.

தமிழர்களாக சமஷ்டித் தீர்வை முன்மொழிவது அபத்தமானது.

ஈழத்தமிழர்கள் தமது முழுமையான சுயநிர்ணய உரிமைக்கும் தனித்துவமான இறைமைக்கும் உள்ள அரசியல் மற்றும் நீதி சார்ந்த நிலைப்பாடுகளையே தமது கொள்கைப் பிரகடனமாக உச்சாடனஞ் செய்தல் வேண்டும்.

மற்றெல்லாம் கொள்கை நிலைப்பாட்டுக்கு மட்டுமல்ல வரலாற்றில் பின்னோக்கி நடக்கும் செயல். இது கொடுக்கப்பட்ட உயிர் ஆகுதிகளையும் களங்கப்படுத்துவதாகும்.

ஆறாம் சட்டத்திருத்தம் என்று ஒன்று இருக்கிறது என்பதற்காக கொள்கையை மாற்றுவதும் வரலாற்றில் பின்னோக்கிப் பயணிப்பதும் அரசியல் விபச்சாரம்.

அதேவேளை, ஆறாம் சட்டத்திருத்தத்தை அப்பட்டமாக மீறுகின்ற கொள்கையையும் முன்வைக்கத் தேவையில்லை.

சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட தீர்வு என்று சொல்லிவிடுங்கள். அது போதுமானது.

**ஒற்றையாட்சியில் தேர்தல் அரசியற்கட்சிகளின் பேச்சுவார்த்தை தொடர்பான வகிபாகம்.**

நாடாளுமன்றத்திற்கோ, மாகாண சபைக்கோ அல்லது வேறேதும் பதவிக்கோ பிரமாணம் எடுக்கும் நிலையில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் தேர்தல் அரசியலில் ஈடுபடுவோர் அனைவருக்கும் ஏற்படும் நிர்ப்பந்தம் ஒன்று ஆறாம் சட்டத்திருத்தத்துக்கு உட்பட்டுப் பிரமாணம் எடுத்துக் கொள்ளல் என்பதாகும்.


இதனாலேயே இலங்கை ஒற்றையாட்சி அரசின் தேர்தல் அரசியலில் ஈடுபடும் எந்த அரசியற் கட்சியும் தன்னை ஈழத்தமிழ் மக்களின் அரசியற் தீர்வு தொடர்பாகப் பேச்சுவார்த்தை மேசையில் ஏகபிரதிநிதியாக உருவகம் செய்வது தவிர்க்கப்பட வேண்டியது.

இந்தப் பிறழ்வை 2009 இற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஊடாக மேற்கொண்டது.

**யார் ஏகப்பிரதிநிதிகள்?**

உண்மையில் பேச்சுவார்த்தைக்கான ஏகபிரநிதிகள் இலங்கை ஒற்றையாட்சி அரசின் வரையறைகளுக்கு உட்பட்டவர்களாக இருக்கவே கூடாது.

இது தான் அடுத்த கட்ட ஜனநாயகப் போராட்டத்திற்கான அரசியல் இராஜதந்







திரத்தின் அச்சுக்களில் ஒன்று. இதையே சாணக்கியம் என்றும் வருணிக்கமுடியும்.

அப்படியான ஒரு ஏக பிரதிநிதித்துவத்துக்கான ஆணை வழங்கும் உரிமையை வேண்டுமென்றால் ஒரு கட்சி பிரதான கட்சி என்ற அடிப்படையில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் தேர்தல் அரசியலில் இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயக வழிகளுக்கூடாக பிறிதொரு தரப்புக்கு வழங்கலாம்.

அப்படியானதொரு தரப்பு சர்வதேச மட்டத்தில் இருக்கும் ஈழத்தமிழர்களாகவோ அவர்களின் புலம்பெயர் வழித்தோன்றல்களாகவோ 2009 இற்குப் பின்னான அரசியல் இராஜதந்திரப் போராட்டத்தின் உத்தியாக அமைவதே பொருத்தம்.

இன அழிப்புக் காரணமாக பாரிய புலப்பெயர்வைச் சந்தித்திருக்கும் தேசிய இனம் என்ற வகையில் ஈழத்தமிழர் தேசத்தின் இணைபிரியா அங்கமே தமிழ் டியாஸ்பொரா எனப்படும் புலம் பெயர் ஈழத்தமிழர்கள் என்ற தாள்பரியத்தையும் இங்கு நோக்கவேண்டும்.

அந்தச் சக்தியையும் இலங்கை ஒற்றையாட்சித்தேர்தல்சகதிக்குள்ஏற்கனவே சிலர் இழுத்து விட்டுள்ளார்கள். அதன் தொடர்ச்சியையே விக்னேஸ்வரனின் கட்சியும் செய்யவேண்டியதில்லை. அது அரசியற் சாணக்கியமாகாது.

ஆக, இலங்கை ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தேர்தல் அரசியலுக்கு இருக்க வேண்டிய பொருத்தமான வகிபாகத்துக்கு அப்பால் அபரிமிதமான ஆணை இருப்பதாகப் பாவனை செய்வதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் சமைப்பதும் ஈழத்தமிழ்த் தேசியத்தை ஊனப்படுத்தும் செயற்பாடுகளாகும்.

இதையே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் செய்கிறதென்றால், அதற்கு மாற்றாகத் தம்மை நிலைநிறுத்த முற்படுவோரும் அதே பிறழ்வைச் செய்வது அபத்தமானது.

ஆக, பிறழ்வுகளில் இருந்து தெளிவு பெற்று முன்னோக்கிச் செல்லல் என்ற நோக்கிலேயே மேலே குறிப்பிட்ட நிலைப்பாடுகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

விக்னேஸ்வரனின் கட்சியைப் பலப்படுத்துவதற்கான முதற்படி அதைக் கொள்கையைப் பிறழ்வுகளுக்குப் பலியாகாத வண்ணம் சாதுரியமாக அமைத்துக்கொள்வதாகும்.

மற்றையதெல்லாம் இரண்டாம் பட்சமானவை. அவற்றைப்பின்னர் நோக்குவாம்.

**நன்றி: கூர்மை**

# தென்கிழக்குப் பல்கலையின் 15 மாணவர்கள் நேற்று கைது

## பதற்ற நிலையை அடுத்து பொலிஸார் குவிப்பு



ஒலுவில், ஒக். 26

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்து போராட்டம் நடத்திய 15 மாணவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து அங்கு பதற்றம் நிலவுகின்றது. பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றிப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடத்தை, தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த சில சிங்கள மாணவர்கள், கடந்த இரண்டு வார காலமாக ஆக்கிரமித்துப் போராடி வருகின்றனர்.

பகிடிவதையில் ஈடுபட்ட குற்றத்துக்காக, பல்கலைக்கழகத்திலிருந்து விலக்கப்பட்டுள்ள, தகவல் தொழில்நுட்பதுறையைச்சேர்ந்த 4 மாணவர்களை மீளவும் சேர்த்துக் கொள்ளுமாறு வலியுறுத்தி மேற்படி மாணவர்கள், நிர்வாகக் கட்டடத்துக்குள் புகுந்து, அதனை ஆக்கிரமித்து போராடி வருகின்றனர்.

இதன் காரணமாக, பல்கலைக்கழக நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் கடந்த இரு வாரங்களாக முடங்கியுள்ளன.

இந்நிலையில், பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்துள்ள மாணவர்களை அங்கிருந்து அகற்றுமாறு, பொலிஸாருக்கு, அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே கட்டளை பிறப்பித்திருந்தபோதிலும் மாணவர்கள் வெளியேற்றப்படவில்லை.

இதனையடுத்து பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்து போராட்டம் நடத்திய 15 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். (ஐ)

# கான்பராவில் வெடி விபத்து; 4 இலங்கையர்கள் படுகாயம்



கான்பரா, ஒக். 26

ஆஸ்திரேலியத் தலைநகர் கான்பராவில் இடம்பெற்ற வெடி விபத்தில் நான்கு இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர்.

உணவம் ஒன்றில் இடம்பெற விருந்த நிகழ்வொன்றுக்காக உணவுதயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நான்கு இலங்கையர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உணவகத்திலிருந்த எரிவாயுக் கொள்கலன் ஒன்று வெடித்தமை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இதன்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக கான்பராவில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் எவரும் ஆபத்தான நிலையில் இல்லை என வைத்தியசாலையின் உள்ளகத்தகவல்களை மேற்கோள்காட்டி அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்துதொடர்பிலானமேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ)

# காணாமற்போவதற்குக் காரணமானவர்களே காணாமற்போனோரை கண்டறியவேண்டும்

## வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கோரிக்கை

வவுனியா, ஒக்.26

30 வருடகால யுத்தத்தில் பலர் காணாமற் போவதற்கு காரணமாக இருந்தவர்களே இன்று காணாமல்போனவர்களைக்கண்டுபிடிக்கவேண்டும் எனக் கூறுகின்றார் என வடக்கு மாகாண சபை முன்னாள்உறுப்பினர்ப.சத்தியலிங்கம்தெரிவித்தார்.

வவுனியா பூந்தோட்டம் முதியோர் சங்கத்தினால் முதியோர் தினமும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று நரசிங்கர் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முதியோர் தினம் என்பது எங்கள் கலாசாரத்தை பொறுத்தவரை ஒரு தேவையில்லாத விடயமாக இருந்தாலும் கூட நாங்கள் பல காரியங்களைக் காரணம்தெரியாமல்செய்துவருகிறோம். சிலவேளைகளில் அது வேடிக்கையாகவும் இருக்கும்.

முப்பது வருடகால யுத்தத்தில் எங்கள் சமுதாயத்தில் சமுதாயத்திற்கு ஒவ்வாத பல விடயங்கள் நடந்துமுடிந்திருக்கின்றன. ஆனால்அந்தச்சமுதாயத்திற்கு ஒவ்வாத விடயங்களைச் செய்தவர்களே அந்த விடயங்களுக்கு எதிராக இப்போது போராட்டங்களைச் செய்கிறார்கள். அதைப்பற்றி பேசுகின்றனர். காணாமற்போனவர்களை எடுத்துக் கொண்டால் 30 வருட கால யுத்தத்தில் காணாமல் போவதற்கு காரணமாக இருந்தவர்களே இன்று காணாமல் போனவர்கள்தொடர்பாகப்பேசிக்கொண்டிருக்கிறார்கள். காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். காணாமற்போனவர்கள் ஏன் காணாமல் போனார்கள்?, எவ்வாறு காணாமற் போனார்கள்? போன்ற பலரின் விடயங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்குத் தெரியும். ஏனெனில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள்தான் காணாமல் போகச் செய்தவர்கள்–என்றார். (ஐ–100)

# கரைச்சிப் பிரதேச சபை முன்பாக பள்ளத்தை மூடுமாறு கோரிக்கை



கிளிநொச்சி, ஒக். 26

கிளிநொச்சி நகரின் கரைச்சி பிரதேசசபைக்கு முன்னால்உள்ள பள்ளத்தை மூடுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பள்ளத்தில் மழை நீர் மாதக் கணக்கில் தேங்கி நிற்பதோடு, கழிவுகளும் சேர்ந்து துர்நாற்றம் வீசுவதாகவும், இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன என்றும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி அதிகளவு பொது மக்கள்,மாணவர்கள்பயன்படுத்தும் வீதியாக உள்ளது. அத்துடன் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம்,பிரதேசசபை,உணவகங்கள் என்பன இங்கு காணப்படுகின்றன.

இந்தப் பள்ளத்தில் தேங்கி நிற்கின்ற நீரினால் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன எனப் பொதுமக்கள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சவுதி ஊடகவியலாளர் படுகொலை; நீதி கோரி கொழும்பில் போராட்டம்




கொழும்பு, ஒக். 26

சவுதி ஊடகவியலாளரான ஜமால் காசோக்கி கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில்ஆர்ப்பாட்டம்ஒன்றுமுன்னெடுக்கப்பட்டது.

இலங்கைக்கான சவுதி தூதரகத்துக்கு முன்பாக நேற்று நண்பகல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சவுதி அரேபியாவின் முடியாட்சியைத் தொடர்ந்து விமர்சித்து வந்த ஜமால், கடந்த 2 ஆம் திகதி துருக்கியிலுள்ள சவுதி துணைத் தூதரகத்துக்குச் சென்றார். அதன் பின்அவர்காணாமல்போயிருந்தார்.

இந்த நிலையில் அவர் கொல்லப்பட்டுள்ளமையைக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சவுதி ஒப்புக்கொண்டுள்ளது.

ஊடக சுதந்திரத்துக்கு எதிரான சவுதியின் இந்தச் செயற்பாடு தொடர்பில் பல சர்வதேச நாடுகளும் கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுமியை கர்ப்பமாக்கிய சிறிய தந்தை கைதானர்

கொழும்பு, ஒக். 26

சிறிமியைத் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திக் கர்ப்பமாக்கிய சந்தேகத்தின் பேரில் சிறிய தந்தையை நேற்றுக் கைது செய்துள்ளோம் என மொனராகலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி கர்ப்பமாக்கியவிடயம்சிறுவர்பாதுகாப்பு அதிகார சபையினருக்குத் தெரியவந்தது. அவர்கள்பொலிஸ்நிலையத்துக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கிணங்க பொலிஸார், அந்தச் சிறுமியை அணுகி அவரிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொண்ட பின்னரே சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

அத்துடன்பாதிக்கப்பட்ட சிறுமி சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் ஐந்து மாதக் கர்ப்பமாகவுள்ளமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை மொனராகலை நீதிவான்நீதிமன்றில்ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# ஆஸியை வீழ்த்தியது பாகிஸ்தான் அணி



ஆஸ்ரேலியா கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் அணியுடன், டெஸ்ட் மற்றும் ரி-ருவென்ரி போட்டித் தொடர்களில் விளையாடுவதற்காக, ஐக்கிய அரபு அமீரகத்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

அங்கு சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர், மூன்று போட்டிகள் கொண்ட 20/20 தொடர்களில் விளையாடுகின்றது.

இதில் முதலில் நடைபெற்ற இரு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரைப் பாகிஸ்தான் அணி, 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து, தற்போது இரு அணிகளுக்கிடையிலான ரி-20 தொடர் நடைபெற்று வருகின்றது. இரண்டு போட்டிகள் கொண்ட ரி-20 தொடரின் முதல் போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக பாபர் அசாம் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் பில்லி ஸ்டேன்லேக், ஹென்ரிவ் டை ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 156 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி, 16.5 ஓவர்கள் நிறைவில் 89 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பாகிஸ்தான் அணி 66 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக குல்டர் நெய்ல் 34 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் இமாட் வசிம் 3 விக்கெட்டுகளையும், பஹீம் அஷ்ரப், சயீன் அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மூன்று முக்கிய விக்கெட்டுகளை சாய்த்த இமாட் வசிம் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி இன்று டுபாயில் நடைபெறவுள்ளது.

# பங்களாதேஷ் அணி வெற்றி




சிம்பாப்வே கிரிக்கெட் அணி, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

அங்கு சென்றுள்ள சிம்பாப்வே அணி, பங்களாதேஷ் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இந்நிலையில் முதலாவதாக இரு அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடர் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 28 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி, நேற்று முன் தினம் நடைபெற்றது.

சிட்டங்கொங் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சிம்பாப்வே அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 246 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக பிரெண்டன் டெய்லர் 75 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் மொஹமட் சய்பூடின் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைதொடர்ந்து 247 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 44.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக, இம்ருள் கெய்ஸ் 90 ஓட்டங்களையும், லிடன் தாஸ் 83 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் சிகான்டர் ரஸா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணி சார்பில், 3 விக்கெட்டுகளை வீழ்த்திய மொஹமட் சய்பூடின் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி, இன்று சிட்டங்கொங் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# நான் 100 வீதம் சுத்தமானவன்

## கூறுகிறார் ரொனால்டோ



தன்சுமத்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்சாட்டு, தன்னை எந்த விதத்திலும் பாதிக்காது என உதைபந்து உலகில் புகழ் பூத்த வீரரான போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ அமெரிக்கப் பெண்ணொருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு, தற்போது பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாடுவதற்காக ஜுவெண்டஸ் அணியின் வீரரான ரொனால்டோ மன்செஸ்டர் நகருக்குச் சென்றுள்ளார்.

அங்கு சென்றுள்ள ரொனால்டோ ஓல்ட்ட்ராபோர்ட் மைதானத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில், கலந்துகொண்டு இந்தப் பாலியல் குற்றச்சாட்டு தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் –

நான் 100 சதவீதம் சுத்தமானவன். களத்திலும் சரி களத்துக்கு வெளியேயும் சரி என்னிடம் ஒழுங்கு உண்டு. இதனால், மகிழ்ச்சியான மனிதனாக உள்ளேன்.

நான் ஓர் அற்புதமான அணிக்காக விளையாடி வருகிறேன். அருமையான, நிறைவான குடும்பம் உள்ளது. 4 குழந்தைகள் இருக்கின்றனர். ஆரோக்கியமாக இருக்கிறேன். என்னிடம் இல்லாத விடயங்களே இல்லை. அற்பக் குற்றச்சாட்டுகள் என் மகிழ்ச்சியைப் பாதிக்காது.

எந்தச் சூழலிலும் நான் பொய் சொன்னதில்லை. என் வழக்கறிஞர்களும் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளனர். நான் எப்போதும் உண்மைக்குத்தான் முதலிடம் கொடுப்பேன். உதைபந்தை அனுபவித்து விளையாடி வருகிறேன். உதைபந்திலிருந்து ஓய்வு பெற்றதும் மீதி வாழ்க்கையைக் குடும்பத்துடன் மகிழ்ச்சியுடன் கழிப்பேன்' என கூறினார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ, கடந்த 2009ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள, லாஸ்வேகாஸ் விடுதியில் வைத்து அந்நாட்டுப் பெண்ணான கத்ரின் மயோர்கா என்ற 25 வயது பெண்மணியை பலவந்தமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என செய்தி வெளியாகியது.

அத்தோடு, அந்தப் பெண், பலமுறை தாம் மறுப்பு தெரிவித்தும் ரொனால்டோ பலவந்தமாகத் தன்னுடன் உறவு வைத்துக் கொண்டதாக குறிப்பிட்டார்.

அது மட்டுமின்றி இந்தத் தகவல்களை வெளியிடாமல் இருக்க பெருந் தொகையான பணம் தருவதாகவும் வாக்குறுதி அளித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமின்றி ரொனால்டோவுடன் எடுத்த புகைப்படங்களையும் கத்ரின் மயோர்கா வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக அமெரிக்கப் பொலிஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில், ரொனால்டோவும், அந்த இளம்பெண்ணும் இந்தப் பிரச்சினையை நீதிமன்றத்துக்கு வெளியே சுமுகமாக பேச்சு மூலம் முடித்துக்கொள்வது என கடந்த 2010ஆம் ஆண்டு முடிவு செய்தனர்.

இதற்காக அந்த பெண்ணுக்கு, ரொனால்டோ 3,75,000 டொலர்கள் இழப்பீடு வழங்குவது என ஒப்பந்தம் போடப்பட்டது.

ஆனால் இந்தப் பிரச்சினை தற்போது மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. ரொனால்டோ மீதான பாலியல் புகாரை நீதிமன்றத்துக்கு வெளியே தீர்த்துக்கொள்வது என போடப்பட்ட ஒப்பந்தம் செல்லாது என அறிவிக்கக்கோரி, அந்த பெண்ணின் சட்டத்தரணிகள் வழக்கு தொடர்ந்து உள்ளனர்.

இதைத்தொடர்ந்து ரொனால்டோ மீதான பாலியல் புகார் மீது அமெரிக்கப் பொலிஸார் மீண்டும் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

இதேவேளை. இத்தகைய செய்தி வெளியிட்ட பத்திரிகை மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரொனால்டோவின் சட்டத்தரணி கிறிஸ்டியன் ஸ்கொர்ட்ஸ் கூறியுள்ளார். மேலும், பத்திரிகையின் இந்தச் செய்தி தனிமனித சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இதற்காக ஊடகவியலாளர்களிடம் இருந்து தனது கட்சிகாரருக்குச் சட்ட ரீதியாக நிவாரணம் பெற்றுக்கொடுக்கப் படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக விளையாட்டு வீரர்களில் மிகவும் புகழ் பெற்ற வீரராக ரொனால்டோ விளங்குவதுடன், இவர் ஐந்து முறை உலகின் சிறந்த உதைபந்து வீரருக்கான விருதை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விக்கியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கில் மாத்திரமல்ல தெற்கு மற்றும் கிழக்கிலும் அடிப்படைவாதிகள் உள்ளனர். இவர்கள் குறுகிய நோக்கத்திற்காகவே செயற்படுகின்றனர். நாட்டில் அநாவசியமான குழப்பங்களைத் தோற்றுவித்து அரசியல் செய்வதே இவர்களின் நோக்கமாக உள்ளது. சுதந்திரக் கட்சி இவ்வகையான அரசியல் செயற்பாடுகளுக்கு இடமளிக்காது – என்றார். (ஐ)

## விக்கியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களது கட்சியும் அவரது கட்சியும் எதிர்காலத்தில் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கான நேரம் வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆரம்பித்துள்ள கட்சி குறித்து கருத்து வெளியிடுகையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் மக்களின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த இரண்டு வருடமாகவே தமிழ் மக்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளிலிருந்து தடம்புரண்டு போகின்றதென்ற பார்வை தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது. அதன் காரணமாகத் தான் ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையால் வடக்கிலும் கிழக்கிலும் நடத்தப்பட்ட எழுக தமிழ் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அந்த விடயமெல்லாம் மக்களுக்கு அதிருப்தி இருக்கின்ற தென்பதைக் காட்டியிருந்தது. மக்கள் எதிர்பார்த்த விடயங்களைக் கூட்டமைப்பு பூர்த்தி செய்யவில்லை அல்லது செய்ய முயற்சிக்கவில்லை. ஆகவே கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வதென்பது விருப்பமில்லாத விடயமாக இருந்தது.

அதாவது அரசியல் கைதிகள் விடுதலை, காணிகள் விடுவிப்பு, காணாமற்போனவர்கள் பிரச்சினை எனப் பல விடயங்கள் தொடர்பில் மக்கள் தெருவில் இறங்கி போராடிக் கொண்டிருக்கையில் அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவான எந்தச் செயற்பாடும் கூட்டமைப்பிலிருந்து கிடைக்கவில்லை.

ஆகவே அவ்வாறான சூழ்நிலையில் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளைக் கூட அரசுடன் பேசியோ அல்லது அழுத்தங்களைக் கொடுத்தோ முடித்து வைக்கின்ற திராணியும் தமிழரசுக் கட்சிக்கோ அல்லது கூட்டமைப்புக்கோ இருக்கவில்லை.

இப்போது விக்னேஸ்வரன் புதிய கட்சியைத் தொடங்கியிருக்கிறார். மக்கள் மத்தியில் முதலமைச்சருக்கும் முதலமைச்சரின் கருத்துக்களுக்கும் மிக அதிகமான ஆதரவு இருக்கின்றதென நாங்கள் கருதுகின்றோம். அவர் மிகவும் நேர்மையாக இந்த அரசியலை முன்னெடுத்துச் செல்ல விரும்புகின்றார். தமிழ் மக்களுடைய உரிமைகள் வெல்வதற்கான உபாயங்கள், திட்டமிடல்கள் இடப்படவேண்டுமென விரும்புகின்றார்.

ஆகவே அந்த வகையில் எமது கட்சியும் அவருடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறது – என்றார். (ஐ-07)

## மனோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீ வித்தியானந்தா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் அமைச்சர் மனோ கணேசன் நேற்றுப் பங்கேற்றார். இதற்காக அந்தப் பாடசாலைக்குச் செல்லும் வீதி மாணவர்களைக் கொண்டு துப்புரவு செய்யப்பட்டது.

மழை பெய்துகொண்டிருந்த வேளை மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் நின்று வீதியைத் துப்புரவு செய்தனர்.

இதனைப் பிராந்திய ஊடகவியலாளர் ஒருவர் புகைப்படம் எடுத்துள்ளார். எனினும் அந்தப் புகைப்படத்தை வெளியிடவேண்டாம் எனச் சிலர் ஊடகவியலாளரை கேட்டுள்ளனர்.

எனினும் மாணவர்களை வைத்து வீதி துப்புரவு செய்தமை தவறான விடயம் என அந்த ஊடகவியலாளர் அவர்களிடம் சுட்டிக்காட்டினார். (ஐ-07)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்கு முன்னர் மக்களாக அதனை அழித்துவிட்டு தீபாவளி கொண்டாடவேண்டும்.

– இவ்வாறு காட்டமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்.

முன்னாள் வடக்கு முதலமைச்சரின் புதிய கட்சி தொடர்பாக வவுனியாவில் தனது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிங்களத்துடன் இரண்டறக் கலந்து, நீதியரசர் பதவிபெற்று, சிங்களச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களைச் சிறையில் தள்ளிய, வேதாரியின் வழைமையான போலி வணக்கத்துடன் தொடங்கிய உரையை நேற்று (நேற்று முன்தினம்) அனைவரும் கேட்டிருப்பீர்கள்.

தமிழினத்தைக் கூறுபோட்டு உருக்குலைக்கச் செயற்படும் சிங்கள தேசத்திற்குச் சாமரம் வீசும் முன்னாள் முதலமைச்சரின் முயற்சியே இது .

கட்சி அரசியல் இன்றித் தமிழர்களை ஒன்றாக்கித் தமிழ் மக்கள் பேரவை ஊடாகச் சாத்வீகப் போராட்டம் மூலம் தமிழர் உரிமையை நிலைநாட்டப்போகின்றோம் என்று சொன்னவர்களின் சாயம் நேற்றோடு வெளுத்துப்போனது.

புத்திஜீவிகளாகத் தம்மை அடையாளம் காட்டித் தமிழ் மக்கள் பேரவையூடாக வெகுஜனப் போராட்டத்தைக் கட்சி வேறுபாடுகள் இன்றி முன்னெடுக்க இருந்த சந்தர்ப்பத்தையும் தவிடு பொடியாக்கி தடம்புரண்டு வேதாரியின் புதிய கட்சியில் சங்கமித்த பேரவைக்கு ஒரு வாசகம் சொல்கிறேன்.

மறத்தமிழனால் ஒதுக்கப்பட்ட பின் போலி வேசம் போட்டு புதிய கட்சி ஆரம்பித்த பேரவை நேற்றிலிருந்து உங்களை நீங்களே சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டியது அவசியம்.

தேசியத்தலைவர் பிரபாகரன் உருவாக்கிய தமிழர் அரசியல் இருப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருக்குலைக்கச் சிங்களத்தால் சூட்சுமமாகக் களமிறக்கப்பட்ட தமிழினத் துரோகியாக அடையாளம் காட்டிய நாள். நேற்றைய நாள் தமிழர் வரலாற்றில் கறைபடிந்த நாள் என வரலாறு தமிழருக்குக் குறித்துச் சொல்லும் என்பதை மக்களுக்குச் சொல்லிவைக்கிறேன்.

பொறுமையின் விளிம்பிலும் துரோகத்தனங்களின் எல்லையிலும் கூட்டமைப்பு புதிய விருட்சம் எடுக்கும் என்பதற்கான ஒரு உதாரணமே நேற்று நடந்த நிகழ்வு.

99 வருடகால அரசியலைப் பற்றி அவர் பேசினார். அந்த அரசியல் போராட்டத்திலோ, அல்லது ஆயுதப் போராட்டத்திலோ உங்களின் பங்கு எங்கே இருந்தது?

சிங்களத்தில் நீதியரசராகி, சொந்தப் பரம்பரையையே சிங்களத்திற்குத் தாரைவார்த்து அங்குதான் பதவிப் பிரமாணம் எடுப்பேன் என்று கூறி அதனைச் செவ்வனே நிறைவேற்றி முடித்த நீங்களா தமிழ் மக்களின் விடுதலையை முன்னெடுத்துச் செல்லப்போகின்றீர்கள்? – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவிதியுடன் இனி எவரும் விளையாடக்கூடாது, நாங்கள் மட்டுமே விளையாடுவோம்' எனக் கூறிக்கொண்டு நேற்று (நேற்று முன்தினம்) விடைபெற்று விட்டது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற நிதி, மதுவரி மற்றும் உற்பத்தி வரிச் சட்டமூலங்கள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போகிற போக்கில் சும்மா போகாமல் எமது மக்களை எச்சரித்துவிட்டே போயிருக்கிறது. 'ஆபத்து காத்திருக்கிறது! மக்களே விழித்திருங்கள்' எனக் கூறி எமது மக்களை எச்சரித்துச் சென்றிருக்கின்றது.

'தமிழர் ஆட்சி மலர்ந்தது!' எனக் கூறப்பட்டு கொண்டு வரப்பட்ட இந்த வடக்கு மாகாண சபையின் கடந்த 5 வருட ஆட்சிக் காலமானது தமிழ் மக்களுக்கு பாரிய துரோகங்களை இழைத்து விட்டு 'முடிந்தது தமிழ்த் துரோக ஆட்சி' என முடிவுக்கு வந்து விட்டது.

இந்த வடக்கு மாகாண சபை ஆட்சிபீடமேறிய காலத்திலிருந்து கடந்த 23ஆம் திகதி அதன் இறுதி அமர்வு இடம்பெற்றதுவரை ஆண்டிருந்த கட்சியின் உறுப்பினர்களினதும், அதே கட்சியின் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களினதும் கருத்துப் பரிமாற்றங்களை உற்றுநோக்குகின்ற எவருக்கும், தமிழ் மக்களுக்கு ஆபத்து இந்தக் கட்சிக் காரர்களிடமும், ஆரம்பந்தொட்டு இந்தக் கட்சி சார்ந்து வழிவந்த கட்சிகள் மற்றும் குழுக்களிடமுமே காத்திருக்கின்றது என்பது மிக இலகுவாகப் புரியும் என நினைக்கின்றேன்.

இவர்கள், தமிழ் மக்களின் துரோகிகள் யார்? என இவர்களுக்குள்ளேயே ஆளுக்காள் ஒற்றை விரலை நீட்டி மற்றவரைக் குற்றஞ்சாட்டி, மூன்று விரல்களைத் தம்பக்கம் மறைமுகமாக மடக்கி மூன்று மடங்கு துரோகிகள் தாங்கள் என்பதை ஒப்புக்கொண்டு வருகின்றார்கள்.

அந்தவகையில் ஒருவழியில் எமது மக்களின் வாழ்க்கை தொடர்பில் இதுவரை இருந்துவந்துள்ள ஒரு பாரிய தடை நீங்கிவிட்டது. தமிழ் மக்களுக்கு தமிழ்த் தரப்பின் ஏனைய சில அரசியலவாதிகளினால் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற ஏனைய தடைகளையும் காலம் நீக்கிவிடும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. அதனை அடுத்தடுத்த தேர்தல்களில் எமது மக்கள் முடிவு செய்வார்கள் என நாம் நம்புகின்றோம்–என்றார். (ஐ)

## விக்கியின் கூட்டணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி முன்னாள் முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணி என்றபெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார். இந்த கட்சியின் அறிவிப்புக் கூட்டம் நேற்று முன்தினம் நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்களைக் கூறுவதுடன், அவருடைய புதிய கட்சி தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் தீர்வைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்கள். அதனை நாங்களும் விரும்புகிறோம். ஆனால் அந்த ஒற்றுமை என்பது கொள்கை ரீதியான ஒற்றுமையாக அமைய வேண்டுமே தவிர கண்ணை மூடிக்கொண்டு எல்லோரும் ஒன்றாகச் சேர்வதல்ல. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்தவரை அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய காலம் தொடக்கம் கொள்கை ரீதியான ஒன்றுமை என்பதில் உறுதியாக இருக்கிறது.

முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் கட்சி விடயத்திலும் அதுவே நடந்திருக்கிறது. குறிப்பாக முன்னாள் முதலமைச்சரின் தரப்பினர் தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து கொள்வது தொடர்பாக எங்கள் கட்சியுடன் பேச்சு நடத்தியிருந்தார்கள். அப்போது நாங்கள் ஒரு விடயத்தைக் கூறினோம். அதாவது தமிழ் மக்கள் கூட்டணியில் சுரேஷ் பிறேமச்சந்திரன் இருப்பாராக இருந்தால், குறிப்பாக கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கும் நிலையில் இருப்பாராக இருந்தால், அவ்வாறான கூட்டணியில் இணைந்து கொள்ள நாங்கள் தயாராக இல்லை என்று கூறினோம். அவ்வாறு நாங்கள் கூறியமைக்கு நியாயம் இருக்கிறது.

கண்ணை மூடிக்கொண்டு அவ்வாறான கருத்தை நாங்கள் கூறவில்லை. அல்லது ஒற்றுமையை விரும்பாமல் அவ்வாறான கருத்தை நாங்கள் கூறவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனுடன் இணைந்து உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஓர் ஆக்கபூர்வமான கூட்டை உருவாக்க முயற்சித்த போது அதனை அவர் குழப்பினார். இதனால் எதிர்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தரப்புடன் கூட்டணி அமைப்பதில்லை என்பது எமது கட்சியின் தீர்மானம்.

அது ஒரு பக்கம் இருக்க சுரேஷ் பிறேமச்சந்திரனின் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இன்றளவும் விலகவில்லை. மறுபக்கம் நெடுங்கேணிப் பிரதேச சபை, வவுனியா நகரசபை போன்ற இடங்களில் அரச கட்சிகளுடனும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தரப்புடனும் கூட்டிணைந்து ஆட்சியைப் பிடித்தது. இதற்கும் மேலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கும் சுரேஷ் பிறேமச்சந்திரனும், அவருடைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் இணைந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த பின்னர் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னவெல்லாம் செய்கிறதோ அதனையே சுரேஷ் பிறேமச்சந்திரன் இன்றளவும் செய்து கொண்டிருக்கிறார். எனவே சுரேஷ் பிறேமச்சந்திரனும் இருக்கும் ஒரு தரப்புடன் நாங்களும் ஒற்றுமை வேண்டும் என இணைந்து கொள்வோமானால் அது போலியான ஒற்றுமை மட்டுமே. இது எங்கள் கட்சியின் நிலைப்பாடாக உள்ளது. இதனை நாங்கள் முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் சார்பில் எங்களுடன் பேச வந்தவர்களுக்குக் கூறியுள்ளோம்.

அதற்கு அவர்கள் கூறிய பதில் சுரேஷ் பிறேமச்சந்திரன் இல்லாத கூட்டணி அமையாது என்பதே. அதற்கு பின்னரும் நாங்கள் கூறினோம். சுரேஷ் பிறேமச்சந்திரனுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுந்த வாய்ப்பை கொடுக்கலாம். ஆனால் அவர் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கும் இடத்தில் இருக்க முடியாது என்று. அதற்கும் மறுப்பு வந்துள்ள நிலையில், துரதிஷ்டவசமாக சி.வீ. விக்னேஸ்வரனின் கட்சியுடன் இணைந்து பயணிக்க முடியாது என்பதை நாங்கள் இப்போது கூறியுள்ளோம் – என்றார். (ஐ-07)

## விக்கியின் குடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன் நகைச்சுவையாகத் தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் மனோவிடம், அனைவரையும் ஒரு குடையின் கீழ் அணி திரளுமாறு விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருந்தார். எனவே அவருடன் நீங்கள் இணைந்து செயல்படுவீர்களா? என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், அவரது குடையில் எனக்கு இடமில்லை. அது சின்னக் குடை. எனக்குப் பெரிய குடையே தேவை. எனவே அது பெரிய குடையான பின்னர் பார்ப்போம் என்று கூறினார். (ஐ)

## விக்கியின் கூட்டணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றுவதன் ஊடாகவே ஜனநாயகம் மேலும் பலப்படும். 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' என்ற நிலைப்பாட்டிலே எமது ஈ.பி.டி.பி. கட்சி உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'தமிழ் மக்கள் கூட்டணி' என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பிக்கப் போகிறார் என முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பு குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எனினும், புதிய கட்சியினர் தமது சுயலாபங்களை பொது நோக்கங்களின் பின்னால் மறைக்க முற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

புதிய கூட்டணியில் சுரேஷ் பிறேமச்சந்திரன், அனந்தி சசிதரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோரின் கட்சிகளும் இணைந்து கொள்ளும். இவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். நாம் இதனைக் காழ்ப்புணர்ச்சியில் சொல்லவில்லை எனவும் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. மேலும் கூறினார். (ஐ)

# கைதிகள் விடுதலை இழுத்தடிப்பு அரசின் மனிதநேயம் கேள்விக்குறி

## சபையில் சுமந்திரன் எம்.பி. சீற்றம்



கொழும்பு, ஒக். 26

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் அரசு தொடர்ந்தும் ஏன் இழுத்தடிப்புகளைச் செய்து வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வியெழுப்பினார்.

இவ்வாறான செயற்பட்டால் நல்லாட்சி அரசில் மனித நேயம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நேற்றுக் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் மிக நீண்டகால மாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களை விடுதலை செய்வதில் அரசு ஏன் இழுத்தடிப்பு களைச் செய்து வருகின்றது?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 100 இற்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி மாற்றுச் சட்டத்தை கொண்டுவருவதாகச் சர்வதேசத்திடம் அரசு கொடுத்த வாக்குறுதிக்கு அமைய சகல அரசியல் கைதி களையும் விடுதலை செய்யவேண்டும்–என்றார். (ஐ)

# நல்லாட்சி மீதான நம்பிக்கை நாளுக்கு நாள் குறைகின்றது

## சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் இந்த நல்லாட்சி மீதான நம்பிக்கை நாளுக்கு நாள் குறைவடைந்து செல்வதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு, நேற்று நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை யின் மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த நாட்டில் தமிழ் மக்கள் படும் இன்னல்கள், துன்பங்களுக்கு இந்த அரசு பொறுப்பெடுத்த காலத்தில் இருந்து தமக்கான மாற்றம் வரும், நீதி கிடைக்கும், அனைத்து விடயங்களிலும் முன்னேற்றம் காணப்படும் என நம்பிய மக்களிடம் இருந்து நல்லாட்சி மீதான நம்பிக்கை குறைவடைந்து வருகிறது.

ஆகவே அரசு அரசியல் கைதிகள் விடயத்தை ஒரு மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் அணுகி அவர் களுக்கான மன்னிப்பையோ அல்லது புனர்வாழ் வையோ பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் பாரிய குற்றங்களை செய்தவர்கள் எல்லாம் வெளியில் இருக்கின்றார்கள். ஆனால் குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாகச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் சிறையில் இருகின் றனர்–என்றார். (ஐ)

# அரசியல் கைதிகள் குறித்து துரிதமாக ஆராயவேண்டும்

## ருவான் விஜயவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26

தமிழ் கைதிகளின் விவகாரம் குறித்து அரசு என்ற வகையில் நாம் துரிதமாக ஆராயவேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

தமிழ் கைதிகளின் விவகாரம் குறித்து அரசு என்ற வகையில் நாம் வழக்குகளைத் துரிதப்படுத்தித் தீர்வுகள் குறித்து ஆராயவேண்டும்.

எனினும் ஜனாதிபதி –பிரதமர் இருவரும் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். கடும் குற்றம் இளைத்தவர்கள் யார்? நிரபராதிகள் யார்? என ஆராய வேண்டும், இயலுமானவரை வழக்குகளைத் துரிதப்படுத்தி விடுதலை குறித்து ஆராயவேண்டும். இவர்கள் நீண்ட காலமாகச் சிறையில் வாடுகின்றனர் என நானும் ஏற்றுக் கொள்கின்றேன். யாரை விடுதலை செய்ய முடியுமோ அவர்களை விடுதலை செய்யவேண்டும்–என்றார். (ஐ)

# அரசியல் கைதிகளென்று சிறையில் எவருமில்லை

## மீண்டும் கூறுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஒக். 26

பாரதூரமான மனித படுகொலைகளைச் செய்த வர்களையும் அரசியல் தலைவர்களைக் கொலை செய்த வர்களையும் எவ்வாறு அரசியல் கைதிகள் எனக் கூறுகிறீர்கள் என கேள்வி எழுப்பிய நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள, எம்மைப் பொறுத்தவரை அரசியல் கைதி கள் என எவரும் சிறைச்சாலையில் இல்லை. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது தண்டனை உறுதியாகி யுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை யின் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச் சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நீதிப் பொறிமுறைக்கு அப்பால் இவர்களை விடு தலை செய்ய மாற்று வழிமுறை இருந்தால் தமிழ் தலைமைகள் அதனை எமக்கு கூறுங்கள். அது சாத்தி யம் என்றால் கைதிகளை விடுதலை செய்ய முழுமை யான ஒத்துழைப்பைத் தருகின்றோம்–என்றார். (ஐ)

# மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும்

## அரசிடம் கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 26

கட்சி முரண்பாடுகள் வேறு, மாகாண சபைத் தேர்தல் வேறு என்பதைப் புரிந்து மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் கோரியுள்ளார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசு மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத் தும் என்ற எதிர்பார்ப்பு இல்லை. அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளும் இல்லை.

ஆனால் ஆளும் கட்சிகள் இரண்டுமே தேர்தலை நடத்துவதில் காலதாமத்தை ஏற்படுத்தி வருகின்றன.

மாகாணசபைத் தேர்தலைக் காலந்தாழ்த்த இரு கட்சிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறிவை அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றது.

கட்சி முரண்பாடுகளை மையமாகக் கொண்டு தேர்தலை காலந்தாழ்த்துவது முறையற்றதாகும் – என்றார். (ஐ)

# களத்தில் குதித்தார் ஆளுநர் குரே கல்வி அமைச்சுக்கு நேரடி 'விசிட்'

## ஆசிரியர் இடமாற்றத்துக்கும் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 26

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலம் நேற்று முன் தினம் நிறைவடைந்த நிலையில் அதன் அதிகாரங்கள் மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயின் கைகளில் நேற்று வந்தன.

தனது கட்டுப்பாட்டுக்குள் முழுமை யான அதிகாரம் கிடைத்த கையோடு நேற்றுக் களத்தில் இறங்கிய அவர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு நேரில் சென்று அதிகாரிகளைச் சந்தித்து மீளாய்வு களை முன்னெடுத்தார்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஆசிரியர் இடமாற்றங் களை எதிர்வரும் வாரங்களில் முன் னெடுக்கவுள்ளதாகவும் அதிகாரிகளிடம் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு வழங்கிய செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் – செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்துக்கு நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சென்ற வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட



அதிகாரிகளைச் சந்தித்து அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணி கள், முடிவடைந்த பணிகள் மற்றும் முடிவடையாத பணிகள் தொடர்பில் கேட் டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் சில பாட சாலைகளில் மாணவர்கள் குறைவாக இருக்கின்றபோதும் ஆசிரியர்கள் அதிக மாக இருக்கின்ற நிலை காணப்படுவதாக வும், இது நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குறைபாட்டைக் காண்பிப்பதாகவும் கல்வி அதிகாரிகளிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்க இருப்பதாகவும், கஷ்டப் பிரதேசங்களில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முன்னேற்பாடுகளை எதிர் வரும் வாரங்களில் ஏற்படுத்த இருப்பதாக வும் தெரிவித்தார்.

இதற்காக அனைத்துக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப் பாளர்கள் மற்றும் செயலாளர் ஒத்து ழைக்குமாறு ஆளுநர் கேட்டுக் கொண் டார்.

வடமாகாணத்தில் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக வேண் டிய அனைத்தையும் செய்வதற்கு நான் தயாராக உள்ளேன். அதற்கு மத்திய அரசின் உதவியைப் பெறுவதற்கு முயற்சிகளை முன்னெடுத்துள்ளேன்.

எனவே இந்த நடவடிக்கைகளில் அதி காரிகள் தமது முழு ஈடுபாட்டையும் செலுத்தவேண்டும். குறுகிய காலத்தில் பெரியளவிலான வேலைகளைச் செய்யக் கூடிய வகையில் அனைத்து அதிகாரி களும் தயார் நிலையில் இருக்கவேண்டும் என்று ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் பிரத்தியேகச் செயலாளர் ஜே.எம். சோமஶ்ரீ உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர் – என்றுள் ளது. (ஐ–07)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.